உ

சிவமயம்.

பதிவிரதா பராக்கிரமம்

அல்லது

# சாவித்ரிசத்யவான்.

(ஓர் இனிய தமிழ் நாடகம்.)

இரண்டாம் பாகம்.



மதுரைத் தமிழ் வித்வான் ஸ்ரீ,

நா. கிருஷ்ணசாமி நாயுடவர்கள்

இயற்றியது.

—

இ. ராமசாமிக் கோன்,

பப்ளிஷர், புக்ஸெல்லர் & ரப்பர்ஸ்டாம்பு மேக்கர்,

வடக்குச்சித்திரை வீதி, மதுரை.

விலை] 1932. [அணா 4

All Rights Reserved.

எக்ஸெல்ஸியர் பிரஸ், மதுரை:—32.

மதுரைத் தமிழ்வித்வான் மகா-ா-ா-ஸ்ரீ

கிருஷ்ணசாமி நாயுடு அவர்களியற்றிய

## பதிவிரதா பராக்ரமம் அல்லது

# சாவித்ரி சத்யவான் சரித்[illegible]ரம்.

நண்பர்களே! கவனியுங்[illegible]ள்!! கவனியுங்கள்!!

மதுரை தமிழ் வித்வான் மகா-ா-ா-ஸ்ரீ நா. கிருஷ்ணசாமி நாயுடவர்கள் இயற்றிய "நல்லதங்காள் சரித்திரத்திலுள்ள பாடல்களைப்படித்த கனவான்கள் அவர் பாடல்களையே படிப்பதற்குப் பிரியங்கொண்டு வாபூருத ஙர்கள் இல்லை" என்பது யாவருமறிந்த விஷயமல்லவா?

ஷை நாயுடவர்களியற்றிய இந்தச் சாவித்ரி சத்யவான் சரித்திரத்தில் கலிங்க தேசத்தரசன் ராஜ தர்பாரில் தேசவிசாரணை செய்யும் ஆடம்பரமான பாடல்களும் சால்வபுரியரசனுடன் போர்புரிந்து நாட்டைக் கைப்பற்றும் வீரா[illegible] பாடல்களும், வசனங்களும் ராஜ தந்திர முறைப்படியும், மிக்கஆக்ரம[illegible]ஷ விதிப்படியும் இருக்கும்.

சாவித்திரி தன் [illegible]மார்களுடன் சந்தவனத்திலுலாவும் காட்சியமைந்த பாடல்களும், சிம்மத்தால் துரத்தப்பட்ட சாவித்ரி, சத்தியவானால் ஆதரிக்கப்பட்ட சமயத்தும், இருவர்க்கும் ஏற்படும் காதல் கலப்பின் சமயத்தும் உள்ள பாடல்களும் தர்க்க வசனங்களும் வெகு சிருங்காரமாயிருக்கும்.

எமராஜன் தர்பாரில் எமபடர்களிடத்தில் அகப்பட்டுத் திண்டாட்டப்படும் சண்டாளன் ஒருவன் தான் செய்த தீயசெய்கைகளைச் சொல்லிப் புலம்புதல் படிக்கப்படிக்கக் கொண்டாட்டமாயிருக்கும். இப்பாடல்களைப் படித்தோர்களும், கேட்டோர்களும் எத்தகையினராயினும் அவர் தீயவழியில் மனதைச் செலுத்த மாட்டார்களென்பது திண்ணம்

சத்தியவான் உயிர் நீங்கும் சமயம் இருவருக்கும் பிரிவாற்றாமையால் ஏற்படும் சோகரசமான பாடல்களைப்படித்தோர் கல்மனதுடையவராயினும் அங்கு கலங்காதிருக்க முடியாதென்பதில் ஐயமில்லை.

பதிவிரதாசிரோன்மணியாகிய சாவித்ரி தன் விரதமகிமையால் எமனுடன் பின்தொடருஞ்சமயம் இருவர்க்கும் ஏற்படும் தர்க்கமும், கணவனின் உயிர்மீட்கும் பாடல்களும், வசனங்களும் படிக்கப் படிக்க உருக்கமும் இன்பமுமாயிருக்கும். ஆகவே தம்பதிகளின் அன்பின் தன்மை வெளிப்படும்

இச்சரித்திரத்திற்கென அமைந்த தமிழருமையான வசனசா[illegible]ங்கள் வாசிக்கத்தகுந்தது. இன்னிசையமைந்த பாடல்கள் படிக்கத்தகுந்தது. இடத்திற்குத் தக்கவாறு அமைந்த புதிய வர்ணமெட்டுகள் கேட்கத்தகுந்தது. சொற்பக் காப்பிகளே தயார். 1-2 பாகங்கள் விலை அணா—8

| | | |
|---|---|---|
| இவரியற்றிய "ஞானசுகிர்த நந்தன் சரித்திரம்" | | 0—2—0 |
| ,, நல்லதங்காள் சரித்திரம் 1, 2 பாகம் தனித்தனி | ,, | 0—4—0 |
| ,, இராமாயணத்திருப்புகழ் நாடகச்சிந்து | ,, | 0—2—0 |
| ,, ஷை கார்த்தி தியானம் சிங்காரப்பாட்டுகளுடன் | ,, | 0—1—0 |
| ,, ஞானசவுந்தரி சரித்திரம் 1, 2 பாகம் தனித்தனி | ,, | 0—4—0 |
| ,, சகுந்தலா சரித்திரம் 1, 2 பாகம் ,, | ,, | 0—4—0 |

உ

கடவுள் துணை.

மதுரைத் தமிழ்வித்வான்,

ஸ்ரீ. நா. கிருஷ்ணசாமி நாயுடவர்கள்

இயற்றிய

பார்ஸி நூதன

பதிவிரதா பராக்கிரம

# சாவித்திரி-சத்யவான்

(ஓர் இனிய தமிழ் நாடகம்.)

இரண்டாம் பாகம்.

---

[சாவித்திரி நாரதமுனிவர் அருகடைந்து]

தாரானபோலுதார என்ற வர்ணமெட்டு.

இராகம்-தேசிகதோடி-தாளம்-ஆதி.

பல்லவி.

பாதாரம் நமஸ்காரம் (பா)

அநுபல்லவி.

பங்கயலிங்கிர்த தங்குமலங்கிர்த (பா)

சரணம்.

ஆதாரமான சத்தி
அரியரதெய்வ பக்தி
ஆட்சியில்திரி லோகமும்புகழ்பெறு
மாட்சிமைமறை மாதவசிலையுறு (பா)

தோஹரா.

ஆத்மபரி சுத்தமே ஆனந்தநித்தமே
அடிமையான் செய்தபுண்யம்
ஆதலால் தரிசனம் அருளினீர் இதுதினம்
ஆமிதே அமிர்தகன்யம்

சரணத்தொடர்.

அரியதாமுங்கள் சேவை
ஆனதுவேறேது தேவை
ஆதியந்தமிலா பரசேகர
சோதிசுந்தா சோபிதநாரத (பா)

சுவாமி! அடியாள் நமஸ்காரம் செய்கின்றேன்.

நார:-கல்யாண்! சாவித்ரி, நீ தீர்க்கசுமங்கிலியாய்இருக்கக்கடவாய். என்! இன்னும் சாவித்திரியின் கல்யாணத்தைப்பற்றி ஒன்றும் முடிவிற்கு வரவில்லைபோலும்? [அரசனை நோக்குகிறார்]

அஸ்:-சுவாமி! அதைப்பற்றித்தான் இப்போது பேசிக்கொண்டிருக்கிற சமயம். தாங்கள் வந்தது எங்கள் பாக்கியம்.

நார:-அப்படியா! பரம சந்தோஷம். ஆனால் அது எனக்கும் தெரியவேண்டியதுதான். [அரசன் புத்திரியை நோக்கி.]

மயிலேஉன்சாயல் என்ற மெட்டு.

இராகம்-தேசிகம்-தாளம்-ஆதி.

பல்லவி.

மகளே உனக்குநனி மணமேமுடித்திங்கினி (மக)

அநுபல்லவி.

அகமேமகிழ்வதற்கு ஆவல்தான்மெத்தவெமக்கு (மக)

சரணம்.

ஏதோ நீ கொண்டஎண்ணம் ஈங்குரைப்பாயே திண்ணம்
இன்றேசெய்வோமதுதான் நன்றேநீகூறும்வண்ணம் (மக)

[மாலவி மகளுக்கு முத்தமிட்டு.]

தாயேகண்ணேசஞ்சீவி சாவித்திரீயெந்தேவி
தக்கவிடைநீசொல்ல வெட்கப்படாதேமேவி (மக)

அம்மா! இதோ நாரதபிர்மம் வந்திருக்கிறார். உன் விவாகத்தைப்பற்றி வினவியறிய ஆவலுறுகிறார். உன் மனோபீஷ்டத்தைத் தெரிவித்துவிடு, அவ்வாறேமுடிப்பதற்குஏற்பாடுசெய்துவிடலாம்.

[சாவித்திரி நாணமடைந்து சற்று ஆலோசிக்கின்றாள், உடனே நாரதர் எழுந்து அரசனை நோக்கி]

ஷை பாட்டு.

ஆரோவொருவன் மீது ஆவலுற்றுளிம்மாது
ஆமதுசொல்லவெட்கம் நாமிருக்கவொண்ணுது (ஆ)

[புறப்படுவதுபோல் அபிநயிக்கிருர்.]

சாவி:-சுவாமி! என்னை மன்னிக்கவேண்டும்.

தொகையறு.

தேவரீ ரறியாத சேதியுமிதாகுமோ
செப்புவேன் செப்புவேனே
தெரிவையென் நாயகன் சீரான சால்வபுரி
திவ்யகுண சத்யவானே

பாட்டுத் தொடர்.

சிவனுடனும்போன்று சேர்ந்தோமிருவரொன்று
திருமணஞ்செய்து வைப்பீர் ஒருமன்த்துடனின்று (சி)

சுவாமி! சால்வபுரி அரசகுமாரன் சத்தியவந்தனையே நான் மணப்பதாக என் மனதில் தீர்மானஞ் செய்துவிட்டேன். இக்காரியம் நிறைவேறும்படி செய்விக்கவேண்டியது தங்கள் கடமை.

[நாரதர் தலையசைத்துக் கொள்ளுகிருர்.]

அஸ்:-சுவாமி! வயதுசென்ற தாய் தந்தையரைக் காப்பாற்றுத பிள்ளையை உலகம் எப்படி இழிவு படுத்துமோ அப்படியே வயது வந்த புத்திரியைக் கட்டிக்கொடாத தந்தையையும் உலகம் இழிவு படுத்தும். ஆகவே இக்காரியம் முடிவுபெற வேண்டியதுதானே? என்ன ஆலோசிக்கின்றீர்கள்!

நார:-ஆம்! ஆனல் "ஆய்ந்தோய்ந்து பாராதான் காரியம்?

அஸ்:-பின்னரது சாந்தனையும் சஞ்சலமே தான்" என்பர்.

நார:- தக்கபாராங்கல்லே என்றவர்ணமெட்டு.

இராகம்-மோகனம்-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

சத்தியவானவன் தானே - நல்ல
சற்புத்ரன் சாமர்த்ய வானே
புத்திசாலி யொரு சாது-அவன்போல்
பூலோகத்திற் கிடை யாது (சத்)

சாவித்திரிக்கவன் தானே - ஒரு
தக்கமணாளனு வானே
நாவிற்புகல வொண் ணாது - நாம்செய்
நல்லதவப்பய னீது (சத்)

ஆனாலவன்குறை ஒன்று - அதை
ஆய்ந்துபின் செய்வதே நன்று
மானகர் விட்டடர் காடு-சென்று
வாழ்கின்றனன் கஷ்டப் பாடு (சத்)

வேந்தே! அவர்களைப் பகைவர்கள் நாட்டைவிட்டுத் துரத்தி விட்டபடியால் காட்டில்சென்று துறவிகளோடுதுறவிகளாய்வாழ்கின்றனர். மேலும் அவன்தந்தைக்குஇரண்டுகண்ணும்தெரியாது.

அஸ்:-சுவாமி! அதற்கென்ன? விவாகத்தைநடத்தி, அவர்களை நம் நாட்டிலேயே இருக்கும்படி செய்துவிடுகிறது.

நார:-செய்யலாம். ஆனால் அதைவிடப் பெரிய தோஷம் இன்னும் ஒன்று இருக்கிறது. அதை நிவர்த்திக்க முடியாதே?

அஸ்:-சுவாமி! என்ன தோஷம்? தெரிவிக்கவேண்டும்.

நாரதர் ஷை பாட்டு

தாய்தந்தையர் செய்த பாபம் - அது
சாற்றவென்றால் பரி தாபம்
ஆயுள் எழுதிய வண்ணம்-அவனோர்
ஆண்டினிற் சாவது திண்ணம் (சத்)

[இதுகேட்டதும் சாவித்திரி மூர்ச்சித்துவிடுகிறாள். தாயாரும்தோழிகளும் அருகிற்சென்று அவளது மூர்ச்சையைத் தெளிவிக்கின்றனர்.]

சாவி:-ஆ! கடவுளே! என் ஆவி துடிக்கிறது. இனி நான் என் செய்யப்போகின்றேன்! எவ்வாறு உய்வேன்!

[கண்களினின்றும் கண்ணீர் ததும்புகின்றது. தாயார் அவளைத்தேற்றி.]

இந்த உடம்பை நம்பி இருக்கலாமா என்ற மெட்டு.

மால:-சாவித்திரியே கண்ணே தயங்கலாமா - அம்மா
சாவித்திரியே கண்ணே தயங்கலாமா - மனச்
சஞ்சலத்தாலே மயங்கலாமா -சும்மா(சா)

தக்கஒருவரனை அக்கறையுடன் பார்த்து
இக்கணமே மணம் முடிக்கிறோம் முகம்வேர்த்து (சா)

சாவி:-மேவியிஃதுரைத்தல் மேன்மையாமா - அம்மா
மேவியிஃதுரைத்தல் மேன்மையாமா - இனி
வேறுகணவன் தேடல் நேர்மையாமா - சும்மா (மே)

விதிவசமதனைத்தம் மதியினில்வெல்வாரோ
பதிவிரதைகள்பாவ கதியினிற் செல்வாரோ (மே)

மால:-விழியிருந்தும் கிணற்றில் வீழலாமா - அம்மா
விழியிருந்தும் கிணற்றில் வீழலாமா - உனை
விதவையாகவும் வைத்து வாழலாமா - சும்மா(வி)

வீரன்சத்தியவானுக் கோராண்டில்முடிவென்று
நாரதமகரிஷி யாருமுரைத்தும்முயன்று (வி)

சாவி:-பழிச்சொல்லுக்கிடமிது பர்தகமே - அம்மா
பழிச்சொல்லுக்கிடமிது பாதகமே - வரும்
பாரம்பரைக்குமொரு கேவலமே - சும்மா (பழி)

பாங்குற்றுக்கணவனோடாங்குற்றுவாழ்ந்தாலும்
மாங்கல்யமற்றுநான் ஏங்கிடநேர்ந்தாலும் (பழி)

மால:-வத்ஸே! இந்த விஷயத்தில்நீ சற்றுக் கவனிக்கத்தான்வேண்டும். கண்ணை மூடிக்கொண்டு கிணற்றில் வீழ்வாரில்லை. தபோதனராகிய நாரதமுனிவர் சொல்வது பொய்யாகாது.

சாவி:-அம்மா இந்த விஷயத்தில் ஏதோ நீங்கள் சொல்லுவது எனக்குப் பொருத்தமாகத் தோன்றவில்லை. மனத்தால் ஒன்றை உறுதிப்படுத்திப் பின்னர்அதுமாறுதிருப்பதுதான் கற்பு. அத்தகையகற்பையுடையவர்தான்உலகம். உலகத்தை வைத்துத்தான் ரிஷிகள் முதல் கடவுள்வரை நிலைபெறுதல் வேண்டும். இதனால்தான் "கற்பினுள் கடவுளும் அடங்குவர்' என்றனர் பெரியோர். அம்மா! என் உயிர் என்னைவிட்டு மாறினும் இவ்வுறுதி என்னைவிட்டு மாறாது.

அஸ்:சுவாமி! குழந்தை சாவித்திரி சொல்வது முற்றிலும் நியாயமாகத்தான் இருக்கிறது. இதற்கென்ன யோசனை?

நார:-என்ன யோசனே? "ஊழிற்பெருவலியாவுளமற்றென்று சூழி னுந்தான் முந்துறும்" என்பது வீண்போமோ?

[சாவித்திரி நாரதரை நோக்கி]

சுவாமி! எனக்கொருசந்தேகம். அதைத்தாங்களேநிவர்த்திக்க வேண்டும். தங்களைப்போன்ற தவரிஷிகள் வாக்குத் தவறுமோ?

நார:-(யோசித்து) ஏன் தவறும்? தவறாது தான்.

சாவி:-ஆனல் நான் முதலில் தங்களை நமஸ்காரம்செய்தபொழுது "சாவித்திரி! நீ தீர்க்க சுமங்கிலியாயிருப்பாய்" என்று ஆசிர் வதித்தீர்களே? அது எப்படிப்பொய்யாகும்?

நார:-அப்படியா! சரி சாவித்திரி! நீ நல்ல புத்திசாலியானதினால் உன் பக்தியால் என்னைக் கட்டுப்படுத்தி விட்டனே.

மான்நிச்சரியாம் என்ற மெட்டு.

இராகம்-தேசிகப்பியாக்-தாளம்-ஆதி.

பல்லவி.

பாக்யசாலியே பாக்யசாலியே-நின்
பர்த்தாஉடன்நாளும் ஒத்துநீவாழியே (பா)

அநுபல்லவி.

தீர்க்கசு மங்கல்ய யோக்கியமே தங்கிய (பா)

சரணம்.

காலன் சத்தியவானைக் கண்டுயிர் வாங்கும்போது
காயத்திரி விரதம் காத்துவந்தா னுன்மீது

டான்ஸ் மெட்டு எடுப்பு

பாலித்திடு - வானங் கிரக்கம்
தாலிப்பிச்சை - தாவெனத் தர்க்கம்
மேலும் புரிந் - தாலவன் பக்கம்
சாலப்பெறு - வாயது வர்க்கம் (பா)

[சாவித்திரியை அருகழைத்துக் காதில் ஏதோ உபதேசித்து, அரசனைநோக்கி]

வேந்தே! சாவித்திரியைச் சத்தியவானுக்கே மணஞ்செய்து கொடுங்கள். ஒரு மூடனைக் கணவனுக அடைந்து, நெடுங்காலம்

அவனோடு துன்பப்படுவதைப் பார்க்கிலும், நல்ல அறிவுடையானைக் கணவனாக அடைந்து, ஒருநாள் வாழினும் அதுவே உயர்ந்ததாகும். மேலும் சாவித்திரியினது கற்புநிலையும், சத்தியவானின் நற்குண நிலையும் அவர்களுக்கு அளவிறந்த நன்மை பயக்கும்.

அஸ்:-சுவாமி! தங்கள் வாக்கியமே குருவாக்கியம். அதுவே எங்கள் பாக்கியம். அப்படியேசெய்கிறேன். நல்ல தருணத்தில் தங்கள் தரிசனம் கிடைக்கப்பெற்றோம்.

நார:-யாதொரு குறையின்றி இத்திருமணம் விரைவில் நிறைவேறக் கடவது ராஜனே! நான் சென்றுவருகின்றேன்.

எல்லோரும்நமஸ்கரிக்கின்றனர். ஆசிகூறி நாரதர்செல்லுகின்றார். திருமணத்திற்கு ஆயத்தப்படுகின்றார்கள்.]

காட்சி முடிகிறது.

---

## முதல் அங்கம் காட்சி இரண்டு.

இடம்:-ஆரண்யத்திலுள்ள தபமுனிவர் ஆஸ்ரமம்.

நடர்:-துயுமத்சேனன், பத்மாக்ஷி, மாடவ்யன் ரிஷிகள், அஸ்வபதி, மாலவி, சாவித்திரி முதலானோர்.

---

[தாய் தந்தையர்களுக்குக் கனிபறித்து வருவதாய், சத்தியவான் ஆச்சிரமத்தை யடுத்த வனம் சென்றிருக்கின்றான். மாடவ்யன் தாய்தந்தையரிடத்துத் துணையாயிருக்கின்றான்]

சத்:-(கனிபறித்துக்கொண்டே) ஆஹா! சாவித்திரியை நான் சந்தித்ததுமுதல் என்மனது அவள்பின் சென்றுவிட்டது. ஒரு வாரத்துள் நான்வாரதாக அவளுக்கு வாக்குறுதி சொல்லி வந்தேன். இந்த நிலையில் நான் எப்படிச் செல்லுகிறது? எங்குபார்த்தாலும் என் ஆருயிர்க் காதலியின் உருவமாய்த் தோன்றுகிறது. மறுபடியும் அவளை நான் எப்போது காணுவேன்! அவளைத்தவிர என்சித்தம் வேறிடம் செல்லவில்லை.

மடமயிலோ என்ற வர்ணமெட்டு.

இராகம்-இந்துஸ்தான் தோடி-தாளம்-ஆதி.

பல்லவி.

இள-மதியேநிகர் . வதனிபருவ ரதியே-உனை
மறக்கமுடிய வில்லை (மதி)

அநுபல்லவி.

நிதிபாக்யமும் நீடாசுமிழக்க
நேர்ந்தும் வனமிது சேர்ந்தும் மனமிகச்
சோர்ந்தும் குணமிகச் சார்ந்திடு சுகிர்த (மதி)

சரணம்

கொஞ்சிக்கொஞ்சிக் குலவிநின்றுயே
கூடுந்தினமது குறித்துச் சென்றுயே
வஞ்சிக்கொடியெனை மணந்திடென்றுயே
வாரமொன்றினிற் சேருவேனெனத்
திரமாகவே கூறினேனிள (மதி)

கனிவகைபறித்திடக் கருதியேவந்தேன்
கவனமுனிடஞ்செலக் கவலையில் நொந்தேன்
இனியநி னுறவின்றி லேக்கமிருந்தேன்
எதுசமயம் உனையடுப்பேன்
அதிசயமா மணமுடிப்பேன் (மதி)

கண்ணே! சாவித்திரி! மனோரஞ்சிதமே! உன்னை நான் எப்போது காணப்போகிறேன்? வாலைப்பருவ மங்காய்? நான் அங்கு வரமுடியாதவனு யிருக்கின்றேன். நீயாவது வருவாயா? நீ ஒரு இராஜபுத்திரி. நான் ஒரு ரிஷி புத்திரன். உனக்கும் எனக்கும் வெகுதூரம். என்றாலும், "காதலுக்கு இந்த வித்தியாசமில்லை" என்பது நீ அறிந்ததுதான். கண்மணி! அன்று நிகழ்ந்தனவை ஒவ்வொன்றையும் நினைக்க நினைக்க மெழுகுபோல் என் மனம் உருகுகின்றது. இப்பொழுது ஏழையாய்விட்டேன், உன்னை எவ்வாறு நான் அடைகிறது! எட்டாக்கனிக்குக்கொட்டாவிவிட்டது போல் ஆயிற்று என் பாடு. ஆனல் விறகில் நெருப்புப் பற்றுவது போல் விஷயத்தில் மனம் பற்றுவது சகசம். அதிலும் பெண்கள் மனம் நிமிடத்திற்கு நிமிடம் மாறுமென்றார் பெரியோர். அது போல் நின் மனம் எங்கு மாறிவிடுமோ என்று பயப்படுகிறேன். பொதுவாகப் பெண்பாலர்க்கு "கண்ணிறைந்த கணவனைப் பார்க்கிலும் கைநிறைந்தபொருள்பெரிது" என்றல்லோவாக்கியம்?

[இவைமுற்றும் மாடவ்யன் தருமறைவிலிருந்து கொண்டே கவனிக்கிறுன்.]

சரணத்தோடர்.

கனவிலும் நினைவிலுங் காணுதுன்ரூபம்
கனிரசமதுரமும் கசக்குதுபாவம்
இனியெனைக் கவலைக்கு ளிடப்பரிதாபம்
என்றுனைநான் நன்றுபெற மன்றல்புரி கின்றதுசொல் (மதி)

[மாடவ்யன் வெளிவந்து]

இளவரசே! இதுஎன்னஇது! சமயத்திற்குத் தகுந்ததுபோல் வாக்கியங்களைத் தலைமாடு கால்மாடாய் மாற்றுகிறாய்? அப்படியல்ல. "கைநிறைந்த பொருளைப்பார்க்கிலும் கண்ணிறைந்த கணவன் பெரிது" என்றல்லோ வாக்கியம்?

[இதைக்கேட்ட சத்தியவான் திடுக்கிட்டு அவனைப்பார்த்து]

ஆம்! அதுசரி. நான் அதை மறந்துவிட்டேன். அது இருக்கட்டும். மாடவ்யா! நீ எங்கு வந்தாய்? தாய்தந்தையரிடத்தில் யார் இருக்கின்றனர்? அவர் தனித்து நின்று தயங்கும்படி விட்டு இங்கு ஏன் வந்தாய்? நீ சீக்கிரம்போ. நான்வந்துவிடுகிறேன்.

மாட:—அரசே தவரிஷிகள் அவரைச் சூழ்ந்திருக்கின்றனர். நான் ஒரு விஷயம் கேள்விப்பட்டு. இங்கு ஓடோடி வந்தேன்!

சத்:-அதுஎன்னவிஷயம்? என்னிடம் சொல்லக்கூடியது தானே?

மாட:-ஆம் உன்னிடம் சொல்லக்கூடியதுதான். உன்னிடம்சொல்லக்கூடாத விஷயம் என்ன இருக்கிறது? ஒருவேளை என்னிடம் சொல்லக்கூடாத பல விஷயம் உன்னிடத்திலிருக்கலாமென்று நினைக்கிறேன். அது சரிதானு அல்லவா?

சத்:-மாடவ்யா! அப்படிக்கொன்றும் இல்லையே!

மாட:-அப்படிக்கொன்று மில்லையா? இல்லாமல்தான் மரம் மட்டைமுதலியனவெல்லாம் உன்கண்ணுக்குச் சாவித்திரிபோல் தோற்றுகிறதோ? என்னையும்சாவித்திரியாகஎண்ணிடாதே!

சத்-(திடுக்கிட்டு மனதினுள்) இங்கு நாம் பேசியவிஷயமெல்லாம் இவன் தருமறைவிலிருந்துகொண்டே கேட்டறிந்தான் போலும்? (வெளிப்படையாய்) சாவித்திரியாவது, காயத்திரியாவது? என்ன நீ சொல்வது புதுமையாயிருக்கிறது!

மாட:-அன்பா! அது இருக்கட்டும், தேசசஞ்சாரம் சென்று நாம் வருகிறபோது ஒருவாரத்திற்கு முன் வழியில் 'சாவித்திரி' என்ற ஒரு பெண்ணை நீ கண்டதுண்டா?

சத்:-(சிறிது ஆலோசித்து) ஆம் கண்டேன்.

மாட:-சரிதான்! "சிறிது நேரத்திற்குமுன் உன்னிடம் சொல்லக் கூடாத விஷயம் ஒன்றுமில்லை" என்றாயே? அதுபொய்யா; இதுபொய்யா? எதுமெய்யென்று நிச்சயிக்கிறது?

சத்:-மாடய்யா! அது விஷயத்தைப்பற்றி உன்னிடம் சொல்ல மறந்துவிட்டேன். அதற்காக மன்னிக்கவேண்டும்.

மாட:-சதாஞாபகத்திலிருந்துவருகிறவிஷயம்என்னிடம் சொல்லு தற்குமட்டும் மறந்துவிட்டது போலும்? சரி "ஒருவாரத்திற் குள் உன்னை வந்து மணப்பேன்" என்று நீ பிரதிக்கினை செய்து வந்ததுண்டா? அதையாவது ஒளியாமற்சொல்.

சத்:-உண்டு மாடய்யா! விஷயமென்ன? சீக்கிரம் சொல்.

மாட:-சீக்கிரமாகத்தான் சொல்லுகிறேன் "அது தவறினால் நான் உயிர் விடுவேன்" என்றும் அவள் சொன்னதுண்டா?

சத்:-உண்டு; ஆம்! நிஜந்தான்! அதற்கென்ன?

மாட:-அதற்கென்னவா? கம்பரசிகள் வாக்குத் தவறுவார்களோ; இன்றோடு நாள் எட்டாகிறதே! 'இனி நீ யாரைக் கல்யாணம் பண்ணிக்கொள்வாய்' என்று கேட்கின்றேன்.

சத்:-(தனக்குள்)இவன் பேசுகிறதைப்பார்த்தால் 'சாவித்திரிஉயிர் விட்டுவிட்டனள்' என்று தோற்றுகிறது(வெளிப்படையாய்) மாடய்யா! என்மனம் பதறுகிறது. விஷயத்தைச் சீக்கிரம் சொல். [சத்தியவானுக்குக் கைகால் நடுங்குகிறது]

மாட:-இளவரசே! மனதைப் பதறவிடவேண்டாம். சாவித்திரி தேவிஎங்களுக்கெல்லாம்இளவரசியானபின்னும்" அப்பெண் இப்பெண்" என்று இந்நேரம் உன்னை அலட்டுதல் செய்ததற் காக என்னை மன்னிக்கவேண்டும். [வணங்குகின்றான்.

சத்:-நண்பா! நீபேசுகிறது எனக்கொன்றும்விளங்கவில்லை. மேலும் மேலும் சந்தேகத்திற்கே இடம் உண்டாகிறது.

மாட:-நண்பா! ஏன் சந்தேகப் படுகிறாய்? விளங்கும்படி சொல்லு கிறேன். சாவித்திரி தேவியாரும் அவரது, தாய்தந்தையரும் கல்யாணத்திற்கு வேண்டியசேகரத்துடன் இங்குவந்திருக்கின் றனர்; அவர்களும், நாங்களும் கலந்து பேசி முகூர்த்தவேளை யும் குறிப்பிட்டுவிட்டோம். உன்னைக் கூட்டிக்கொண்டு வரும்படி அரசர் கட்டளை; செல்லுவோம் வா.

சத்:-மாடவ்யா! என் நிலைமையைக்கண்டு, நீ என்னைப்பரிகசிக்கின் றனை என்று நினைக்கிறேன். அப்படித்தானா?

மாட:-நினைப்பானேன்? அங்குவந்து பார்த்தால் தெரிகிறது!

சத்:-இந்த விஷயத்தில் நீ பொய் பேசமாட்டாயென்று நினைக்கி றேன். ஆனால் எப்போதும் நீ வேடிக்கையாகப் பேசுகிற வன். நல்லது போவோம் வா.

[இருவரும் செல்லுகின்றனர். சாவித்திரி முதலியோரைக் காண்கிறான். சாவித்திரியை விவாகஞ்செய்து கொள்ளும் படி சத்தியவானை வேண்டுகின்றனர். அவன் தனது கால நிலைமையை எடுத்தோதி மறுக்கின்றான்]

விபரீதகாலத்திலே என்ற வர்ணமெட்டு.

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ஆதி.

வனவாசகாலத்திலே மணக்கோலமா-எனக்கு (வ)

தனதான ராஜ்ஜியமும் சமமானபாக்கியமும்
தாமுமிழந்திருந்த சருகுதழைகள் தின்று திரியும்(வ)

தந்தையோகண்ணிழந்தார் தாயார்சுகமிழந்தார்
தவசுபுரிந்துநாங்கள் தனித்து வனத்தில் சலித்துத்திரியும்(வ)

எல்லாம்படைத்தநீங்கள் ஏதுமற்றஏழைநாங்கள்
ஏற்றஉடைஉணவுமில்லா திடருந்துயருமிகுந்துதிரியும் (வ)

சத்:-ஆகவே எனக்கு விவாகம் வேண்டாமென்று நினைக்கிறேன்.

தபோ:-பாலா! வாழ்வையுந் தாழ்வையும் பொறுத்ததல்ல விவா கம். ஆகவே நீ நின் நிலைமையைக்குறித்து மறுக்காமல் இப் பெண்மணியை விவாகஞ்செய்துகொள்வாய்[விவாகம்நடக்கிறது]

காட்சி முடிகிறது.

## முதல் அங்கம், காட்சி மூன்று.

இடம்:- எமலோகம் - தர்பார்.

நடர்:-எமதர்மராஜன், நாரதர், எமபடர்கள், முதலியோர்.

திரிலோகமும்புகழும் என்ற வர்ணமெட்டு.

இராகம்-மத்யமாவதி-தாளம்-ரூபகம்.

ஏகாதிபத் யவை வச் சுதமா
ஏம ராஜ பூப தி நானே (ஏ)

இகபரசகலஉயிர்க்கும் தகையதொர் பதவிகொடுக்கும்
எட்டுத்திக்கும்கடல்புடை வட்டத்திற்கும்ஒருகுடை
இசைமாருமனுநீதன் வசைசேராமறைவேதன்
இமையோரையும் மதியாதவன் அணுவாகிலும் பிசகாதவன் (ஏ)

ஓரடிச்சந்தம்.

இராகம்-காம்போதி-தாளம்-ஆதி.

பல்லவி.

எமதர்மன் நானே மிக்கவுக்ர
எமதர்மன் நானே (எம)

அநுபல்லவி.

எல்லோருக்குமே வல்லானாகிய (எம)
எண்டிசையும்புகல் கொண்டுவிளங்கிடும் (எம)
எவர்தம்உயிரையும் கவரும் அதிபல (எம)
இடாதகொடியரைப் படாதுபடுத்திடும் (எம)
ஈசனும்பயமடை பாசக்கயிறுடை (எம)
ஏதும் நீதியி லாத பாதகர்க் (கெ)

சரணம்.

தமதுநயங்கருதித் தனக்குவியல்குவித்து,
சகலவுயிரிடத்தும் தயவென்பதைவிடுத்து,
சார்ந்தவரைக்கெடுத்த சண்டாளலோபிகள்
தஞ்சமென்றுரையே தனிக்கவிட்டபாவிகள்
சேர்ந்துமனைவியைத்தின் டாடவிட்டமூடர்கள்
சென்றுபரத்தையர் சிநேகம்வைத்தகேடர்கள்-உடல்

தளர்ந்து செயல்முழு திழந்து துரையெனப் புகழ்ந்து
பசியென அடைந்து கேட்பவர்
தனக்கிடாதும் தருமச்செயலை
நினைத்திடாதும் பிறருக்கெதுவும்
கொடுத்திடாதும் பெரியோரிடமே
அடுத்திடாதும் இதுபாவமென
அறிந்துங் கொடுமையே புரிந்தும் உணவின்றி
வருந்தும் இவரெனத் தெரிந்தும் அவரிடம் - வட்டி
வட்டிக்கு வட்டி
ஒட்டிக்கி ரட்டி
கொடுவெனக் கிட்டி
ரகசியப் பெட்டி
தனில்வைத்துக் கட்டி
புதைத்திடு மட்டி
மடையர்லோபிகள் கடையர்கோபிகள்
விடையர்போகிகள் அடையம்மோகிகள்
மடியைப்பிடித்து உயிரைப்பறித்து
கதையாலடித்து உதையுங்கொடுத்து
வக்ரதண்டச் செக்கிலிட்டு மிக்கவே யரைக்கவிட்டு
வாட்டுவேன் கழுமரத்தில்
பூட்டுவேன் அனல்வளர்த்து
மூட்டுவேன் நெரிஞ்சிமுள்ளி
லோட்டுவேன் இசையமிர்த
மதுரபாஸ்கரகிருஷ்ணர் வகுத்தநெறிமுறையை
மறுத்தவரைநரகில் புகுத்துந்திறமுடைய (எம)

[எமதர்மன் சிம்மாதனத்திலிருந்து
தெய்வ வணக்கஞ் செய்கிறான்.]

இங்கிலீஷ் நோட்-இராகம்-பியாண்டு.

ஆதியந்த ஜோதி இங்கு அங்கு மெங்கு முற்றவா
அண்டபிண்ட கண்ட மென்ற அத்தனையும்பெற்றவா
அரனயன் அரியென
ஆனவானவா
அஞ்ச லித்தேன் இன்று மென்றும் ஆதரிக்கவா (ஆ)

[எமன் ஆசனத்தில் அமர, கிங்கிலியர் அனைவரும் அவரவர் ஆசனங்களில் அமருகின்றனர். எமபடார் வருகைசயாய் நின்று உத்திரவை எதிர் பார்க்கின்றனர்.]

இங்கிலீஷ் நோட்டு-இராகம்-பியாண்டு.

உக்ரசிங்க வக்ரதந்த பற்கடங்கும் தூதர்காள்
உரிய பெரிய கரியதேக முற்றகொற்ற காதர்காள்
சித்ரபுத்ரன் முத்ரையோடே ணித்ததி வரவில்லை
சென்று நின்று விண்டுகொண்டு சீக்கிரம் வருகுவீர்

அா:- உத்தமா-இத்ததி - உங்கள் பாதமே
உந்தமுந்த வந்தனம் புரிந்து நின்றமே (உ)

மாதர்க்கணி கலநிதியே என்ற இங்கிலீஷ் நோட்டு.

இராகம்-பார்ஸி-தாளம்-ஏகம்.

பல்லவி.

எம:- ஆயுட் கணக்கிடும் வீரா-ஓர்
அணுவும் பிசகிடாத் தீரா

அநுபல்லவி.

மாயையிலே மனம் பற்றிடவே
மண்பல பிறவிகள் உற்றிடவே- அதி
தீயபா தகவினை முற்றிடவே- உடல்
தீர்ந்தபின் நரகினைப் பெற்றிடவே- உயிர்

சேதிக்கப் படுகிறதா
சோதித்திட விடுகிறதா-சொல் (ஆ)

சித்:- சரணம்.

மண்ணின் கண்விதிமுடி வேபார்த்து
மாய்கின்ற உயிர்கொணர்ந் தேசேர்த்து
புண்யபா வங்களைவி [illegible]ர்த்து
போடும் தண்டனையீதென் றேதீர்த்து

பொன்றும்படிசெயு முறையே-சரி
ஒன்றும் இலையதில் குறையே (ஆ)

எம:-சித்திரகுத்ரா! ஆன்மகோடிகள் அது அது செய்கின்ற புண்ணிய பாவங்களுக்குத் தக்கபடி நம்மால் இங்கு தண்டிக்கப்பட்டு, எஞ்சி நின்ற புண்ணியப்படி நல்ல ஜனனமும் எஞ்சி நின்ற பாவப்படி தீயஜனனமும் அடைந்து வருகிற அந்த முறையில் சிறிதுங் குறைவில்லை யல்லவா? சொல் சீக்கிரம்!

சித்:-ஆம்! அரசே! அதில் யாதொரு குறைவும் இல்லை. இந்திர லோகம், சத்யலோகம், கயிலாயம், வைகுந்த முதலிய ஸ்தானங்களில் அவரவர் கடமையைச் செலுத்துதற்குச் சிறிது தவறினும் தவறலாம். இந்த எமலோகத்திலோ அம் முறையில் ஒரு எட்பிரமாணம் பிசகினல், பின்னர் பூவுலக மேது, வானுலகமேது, தேவரேது, கடவுளேது?

எம.-பேஷ்! பேஷ்! பரம சந்தோஷம்; மெச்சினேன் சித்ரபுத்ரா! இன்று விதிமுடிந்து கொண்டுவரப்பட்டிருக்கிற சண்டாளர் யார்யார்? அவர்களைக்கொண்டுவந்து எனக்குமுன் நிறுத்தும் படி உத்திரவிடு. பார்ப்போம் சீக்கிரம்.

[ஒரு கிங்கிலியன் ஒரு சண்டாளனை நெட்டித்தள்ளிக் கொண்டு வருகிறுன். சித்ரகுத்ரன் அவனைக்காட்டி]

அரசே! இதோ இந்தச் சண்டாளன் பூலோகத்தில் மகா போக்கிரி. யாரிடத்திலும் 'நான்' என்று அகங்கரித்து வம்பு பேசுவான். 'பெரியவர்சின்னவர்' என்ற தாரதன்மியம்இவனிடத் தில் மருந்துக்கும் இல்லை. சில சாதுக்களுடைய மனது நோக இவன் பேசி அவர்கள் கடவுளிடத்தில் முறையிட்டிருக்கிறுர்கள்.

[ஏட்டுக்கணக்கை எடுத்து எம னுக்கு வாசித்துக் காட்டுகிறுன்.]

எம:-இந்தச் சண்டாளனைக் கொண்டுபோய் அக்கினியில் இவன் நாவைப்பிடித்திழுத்து வாட்டி சித்ரவதைசெய்து நரகத்தில் தள்ளி, அடுத்தபிறவியில் ஊமையனுய்ப்பிறக்கும்படிசெய்வி.

சண்:- மோகங்கோள்ளத் தருணமல்லவே என்ற மெட்டு.

இராகம்-தன்யாசி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

ஐயையோ நான் என்ன செய்குவேன்
அனியாயப்பாவி . (ஐ)

அநுபல்லவி.

வையகத்தி லேகொடிய வாதனைசெய் தேமிடிய
வம்புவழக்காட நான்கெட்டி வணங்காதகட்டி (ஐ)

சரணம்.

ஆணுவத்திலே யிருந்து யாரையுமே யான்சினந்து
அக்ரமமதாகப் பேசினேன் அடுக்காதேசினேன் (ஐ)
நல்லவர்மனது நோக நான்பலவைததிற்காக
நாவைத்தீயில் வாட்டச்சொல்லுரார்-நரகில் தள்ளுரார் (ஐ)

[நெட்டித் தள்ளிக்கொண்டு போகிறார்கள்.]

[கிங்கிலியர் மற்றொரு சண்டாளனைத் தள்ளிக்கொண்டு வருகிறார்கள்.]

சித்:-அரசே! இவன் பூலோகத்தில் தன் பெண்சாதியை வீட்டில் வைத்துப்பல பிறமாதர்கள் கற்பழித்தவன். மேலும் தன் வைப்பு ஒருத்தி வார்த்தையைக்கேட்டுத் தன்மனைவியை நஞ் சிட்டுக்கொன்றவன். இவனைத்தக்கபடி தண்டிக்கவேண்டும்.

எம:-அப்படியா! இந்தச்சண்டாளனைக் கொண்டுபோய் நீண்ட இரும்புக்கம்பியில் மாட்டி, அக்கினியில் வாட்டிப் பின் செக் கினிலும் போட்டு ஆட்டும்படி உத்தரவிடு.

சண்:- சோமசேகரனருளும் பாலாவேலா என்ற மெட்டு.

இராகம்-இந்துஸ்தான்கவாய்-தாளம்-ஆதி.

பல்லவி.

ஆருமற்ற நானனுதி யானேன் ஆனேன்-இதை
அந்தநாளறிந்திடாமற் போனேன் போனேன்-ஐயோ (ஆ)

அநுபல்லவி.

பாருலகில் நான்கொடிய பாவி பாவி - பல
பத்தினிமார் கற்பழித்தேன் மேவி மேவி - மனம்
தேரியே கொடுத்தேன் வச நாவி நாவி - தின்று
செத்து மடிந்தாளெனது தேவி தேவி - ஐயோ (ஆ)

சரணம்.

ஆகவே இரும்புக்கம்பி ஈட்டி ஈட்டி-கொண்டேன்
அங்கமுழுதும்பதிய மாட்டி மாட்டி -என்னை
வேகவே யனல்வளர்த்து வாட்டி வாட்டி - நரகில்
வீழ்த்தவேபோரார்செக்கினில் ஆட்டி ஆட்டி - ஐயோ (ஆ)

[எமபடார் அவனை நெட்டித்தள்ளிக்கொண்டு போகிறார் கள், மற்றொரு சண்டாளனைக் கொண்டுவருகிறார்கள்.]

சித்-வேந்தே] பூலோகத்தில் இவன்செய்த கொடுமைகளுக்கு ஒரு கணக்கில்லை. இவனது பாபச்செய்கைகளைப் பகுத்துணர்ந்து விதிக்குந்தண்டனைஈதென அவனுக்கு நானேவிதித்துவிட்டேன்.

எம:-சரி அப்படியா! சித்ரகுத்ரா! நமது எமலோக ஞாயக் கோர்ட்டுச்சட்டப்படி நீயே அவனுக்குத்தண்டனைவிதித்தது பற்றிப் பரமசந்தோஷம். எங்கே அவனைச்சொல்லும்படிசெய்

[அச் சண்டாளன் எமனையும் சித்ரகுத்ரனையும்நோக்கி]

சண்:- நந்தவனத்திலோ ராண்டி என்ற வர்ணமெட்டு.

இராகம்-நாதநாமகிரியை-தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

இனியென்ன செய்குவேனோயோ-முன்னோர்
எடுத்துகூறியவற்றில் யாதேனும் பொய்போ
அனியாயஞ் செய்வது பாவம்-என்று
அறியாது போனேனந் தோபரிதாபம் (இனி)

அன்னைசிற் றன்னையைக்கூடி-எந்தன்
அப்பனுக்குத்தெரி யாதுறவாடி
சின்னஒருபிள்ளை பெற்றேன்-அதைச்
சேதித்தேன் ஆட்டுக்கறியுடன் விற்றேன் (இனி)

பொய்யும் புழுகுமாய்த் தூற்றி-மெத்தப்
போக்கிரி நான் நம்பினோரையே மாற்றி
கையுங் களவுமாய்க் கண்டு-என்னைக்
*கவர்மெண்டார்¶ஜய்லிலே வைத்ததுமுண்டு (இனி)

§நோட்டெழுதிக் கடன் வாங்கி-பல
நூற்றுக்கணக்கதில் வட்டியுமோங்கிக்
||கோர்ட்டில்‡வியாஜியந் தந்தார்!ஜப்தி
கொண்டெனைத் தேடியென் வீட்டுக்குவந்தார் (இனி)

"என்பிள்ளை இவனல்ல" என்று-கோர்ட்டார்
ஏற்றுக்கொள்ளும்படி விண்ணப்பமொன்று
§கன்பர்செய் யென்றப்ப னுக்கு-புத்தி
காட்டினேன் அதுசெய்ய ஜெயமெந்தனுக்கு (இனி)

*கவர்ன்மென்ட்டார்-அரசாங்கத்தார். ¶ஜய்ல்-சிறைச்சாலை§நோட்கடன்பத்திரம். ||கோர்ட்-நியாயஸ்தலம். ‡வியாஜியம்-வழக்கு §கன்பர் செய்-கொடுக்கச்செய். இவைமுழுதும் திசைச்சொற்கள். பின்நிகழணி.

கடன்கொடுத் தார்வாயில் மெள்ளு-மண்ணைக்
கண்ட மட்டும் போட்டுக் குடித்தேனே கள்ளு
திடமாக முறுக்கினேன் மீசை-பல
தீவினை செய்துநான் தேடினேன் காசை (இனி)

ஆங்கிலம்கொஞ்சம் படித்து-அதில்
அறிவாளிபோலவே யானும்நடித்து
தாங்கி வியாஜ்யங்க ளாடி-கோர்ட்டில்
தள்ளுபடியான நானொருபேடி (இனி)

செய்நன்றி முழுதும் மறந்தேன்-உதவி
செய்தோர்க்கு மேபல தீமைபுரிந்தேன்
மெய்யாக வாழ்வோரைக் கண்டு-பல
வீம்புபுரிந்தேன் விரோதித்துக்கொண்டு (இனி)

தம்பிக்குப் பங்கில்லை என்றேன்-தந்தை
தானாகவே சாக நஞ்சிட்டுக்கொன்றேன்
வம்புத்தனமெந்தன் பாடு-எங்கள்
வங்கிசங்கேட்டுச் சிரித்ததேகோடு (இனி)

செய்தகொடுமை யனந்தம்-முற்றும்
செப்பவென் றாலஃ தோர்பிரபந்தம்
நெய்யை நெருப்பி லிருக்கி-அதில்
'வில்' என்று சொல்லுவார் நேராயமுக்கி (இனி)

பழுக்கவே காயவைத் திட்ட-இரும்புப்
பாவையைத் தழுவவும் பாறையில் முட்ட
இழுக்கவும் உதைக்கவும் வாரார்-இதோ
ஏமகிங் கிலியர் எனைக்கொண்டு போரார்- (இனி)

ஏம:-சித்திர குத்ரா! இந்தச் சண்டாளனுக்கு நீ இட்ட தண்டனை முற்றிலும் சரி. இவன் நாவை இழுத்துப்பிடித்து ஊசியினால் குத்திக் கயிறு கோத்துப் பரபரவென்று காட்டிலும்மேட்டிலும் இழுத்துக்கொண்டு போகும்படியும் உத்தரவு கொடு.

[எமபடார் அவனை இழுத்துக்கொண்டு போகிறார்கள். மற்றொரு சண்டாளனையும் கொண்டு வருகிறார்கள்.]

சண்:- பத்தோன்பதாம் நூற்றுக்குமேல் என்ற மெட்டு.

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்- ஆதி.

கண்ணிகள்.

புருஷனுக்கும்பெண்சாதிக்கும் பொருந்தாமலேகோள்முடித்துப்
போட்டிபண்ணிக்குடிகெடுத்துப் பொருள்விரயமாக்கிவைத்தேன்

பொய்சாட்சி சொல்லிச் சொல்லிப் பணம்பறித்தேன்
பூதம்போல் பூமியிலே புதைத்துவைத்தேன்(புரு)

அண்ணன் தம்பி இருவருக்கும் ஆகாமலே கோள்முடித்து
ஆங்கவர்கள் கோடுசென்று அடித்துக்கொள்ளவகைதொடுத்தேன்

ஆங்காரம் மூட்டி அதிற் பணம்பறித்தேன்
அனியாயமாயவரை யான்கெடுத்தேன் (அண்)

கைலஞ்சம் வாங்கிக்கொண்டு காணுதோர்செய்திதனைக்
கண்டவன்போல் கோடடுத்துக் கட்டுரையாய் நானுரைத்தேன்

கன்னியர்தங் கூட்டத்திலே காதறுத்தேன்
கற்றவர்கள் மனதுநோகக் கடிந்துரைத்தேன் (கை)

எமः-சித்ரகுத்ரா! இந்தச்சண்டாளனைக் கொண்போய் நரகக்குழி
யில்தள்ளி, தேள், நட்டுவாக்காலி, பூரான்,பாம்புஇவற்றைக்
கொண்டு தேகமெல்லாம் கடித்துக் குதறும்படி ஆக்ஞையிடு.

[அவனைப்பிடித்துத் தள்ளிக்கொண்டு போக
அவன் கதறிக்கொண்டே போகின்றான்]

எம:-சித்ரகுத்ரா! இன்னும் யார் யார் இருக்கிறார்கள்?

சித்:-பிரபு! வேறுயாரும் இல்லை. இனிக் கொண்டுவரவேண்டிய
பாக்கிமட்டும் இருக்கிறது. (கணக்கை எடுத்துப் புரட்டிப்
பார்த்து) அரசே! சால்வபுரியரசன் துயமத்சேனனுடைய
மகன் சத்தியவான் என்னும் சத்தியவந்தன் இன்னும்
இருபத்தெட்டு நாழிகைக்குள் நம் மிடம் வரவேண்டியவன்.

எம:-அப்படியா! அந்தச் சத்தியவந்தனுடைய உயிரை உடனே
இங்கு கொண்டுவரும்படி தூதர்களுக்குத் தெரிவித்துவிடு.

[இதுசமயம் நாரதர் இங்கு வருகிறார்.]

தேன்குன்றந் தங்கியவா என்ற மெட்டு.

இராகம்-அமீர்கல்யாணி-தாளம்-ஏகம்.

ஹரி ஹரி ஓம் நாரணனே
ஆத்மபரி பூரணனே
திரிபுவனக் காரணனே
விகசிதவு தாரணனே (ஹரி)

ஆதிமூலம்மென்ற யானைமுன் வந்தாய்
ஆனந்தவாழ்வதற் காகவே தந்தாய்
சோதிசொரூபந் துலங்கநிறைந்தாய்
தொண்டரிருதயந் தோன்றிச்சிறந்தாய்
சுரபதியுடன் அரனயன்முதல் தொழுதிடுமதுரூதா
சரணதுபெறக் கரமதுகுவி தமியனுக்கருள் தாதா
சுந்தரானந்த சுகிர்த பொற்பாதா
தோத்திர தித்வ கிருஷ்ண சங்கீதா (ஹரி)

[எமதர்மன் நாரதரைக்கண்டு ஆசனத்தை விட்டிறங்கி நமஸ்கரிக்கின்றான். நாரதர் ஆசீர்வதித்து ஆசனத்தில் அமர யாவரும் அமருகின்றனர்.]

எம:-சுவாமி! எது தாங்கள் இன்று இங்குப்பிராப்தமானகாரியம்?

நார:-எமதர்ம! ஒன்றுமில்லை. ஒரு சிறு காரியத்தை உத்தேசித்து வந்தேன். உன்னைப் பார்க்கவேண்டுமென்ற பிரியமுமுண்டு.

விருத்தம்

உத்தம ஏமநின் பால் ஒருவரம் வேண்டி வந்தேன்
சித்தம்வைத் தருளவேண்டும் தேவிசா வித்ரிமாதோர்
பத்தினி யாதலாலே பார்மிசையவள்மணாளன்
சத்திய வானுக் காயுள் தந்துநீ உதவு வாயே.

எம:-(திடுக்கிட்டு) சுவாமி! இது என்ன வார்த்தை பேசுகிறீர்கள்?

விருத்தம்

வான்புவி கீழ்மேலாக மாறினுங் கதிரோனுக்கு
தான்வட தென்பா லாகத் தவறினு மெல்லா மீன்ற
கோன் தனிக் கடவுள் மாற்றங் கொள்ளினும் முனிவரேறே
நானிவண் பிசகேன் நீவிர் நவில்வது குற்றந் தானே.

ஹாவுரே மேரிஹாவ்பியாரி என்றவர்ணமெட்டு.

இராகம்- கானடா-தாளம்-ஆதி.

பல்லவி

நாரதரேநீ ரென்ன வார்த்தை நவின்றீர்-ஓகோ- (நா)
நானுமை நன்கறிவேன் நாடுமறியு முமை (நா)

அநுபல்லவி.

பேரைக் கெடுத்துக் கொள்ளப் பிரயத்த னப்பட்டீரா (நா)

சரணம் தேசியபியாக்.

கடவுளுக் கும்விதித்த கட்டளை தவறுமா
கறந்த பாலும்பிறகு காம்பினுள் நுழையுமா
உடலைப் பிரிந்தஉயிர் உற்றங்கு நிலவுமா
ஒன்றுமறியாதவர்போல் உளறிக் கொட்டிட வந்தீர் (நா)
ஆஸ்பத மானதிலே யாவுமே யறிந்தநீர்
அயன்விதி யுந்தவற யாண்டறிந்து பேசுறீர்
பாஸ்கரகிருஷ்ணர்சொன்ன பண்ணிசைபணித்தசீர்
பதமுணர்ந்தும் மனந்துணிந்தா இதுபுகன்றீர் (நா)

சுவாமி! நீங்கள் எல்லாம் தெரிந்த தபோ தனராய் இருந்தும் கூட ஏதோ ஒரு சிறுகுழந்தை பேசுவதுபோல் பேசுகிறீர்கள். "இன்னது முடியும், இன்னது முடியாது" என்று இது சமயம் நீங்கள் பகுத்துணராது பேசவந்ததாக நான் அறிகிறேன். ஆனால் "முதல்முதல் விளையாட்டாகப் பேசுகின்ற எந்தக்காரியமும் பின்னர் அது வினையாய் விளையும்படி செய்வித்து, ஈற்றில் வெற்றியும் பெறுவீர்கள்" என்று தங்களைப்பற்றிநான்நன்குணர்வேன். என்றாலும், இதுவிஷயத்தில்நீங்கள் விடாமுயற்சிகொண்டும் அதுவீணாய் முடியுமாகவே இதைப்பற்றி இனிப்பேசாது செல்லுதல்வேண்டும்.

நார:-எமதர்மா! நான் உன்னைச் "சித்தம்வைத் தருளல்வேண்டும்" என்று கேட்டுக்கொண்டதற்காய் என்விஷயத்தில்இவ்வளவு நேரம் நீ பேசிய பேச்சு அளவுகடந்துவிட்டது. என்றாலும்,

மன்னு தந்திவேர் என்ற மெட்டு.

இராகம்-பார்ஸ்கமாஸ்-தாளம்-சாப்பு.

சரணம்

நார:- ஏமா நீ மறந்தாய்
ஏம:- ஏதோ நான் மறந்தேன்
நார:- ஏனோ தான் மறந்தாய்
ஏம:- என்ன தான் மறந்தேன்
நார:- எண்ணிப்பா ரதுதெரியும்
ஏம:- இயம்பிடிலன் றோ புரியும்
நார:-ஈசனிடம் முன்னொருகால் ஏரீயுதை பட்டாய்
ஏற்றஉயிர் மார்க்கண்டனுக் கீந்துடன்கும் பிட்டாய்
ஏம:-ஈங்கிதையோர் கேவலமாய் ஏயியம்பு கின்றீர்
எம்பெருமான் அன்றிநம்மால் யாதுசெயல் கண்டீர்
நார:- இப்போதி துன்னாலே யாம்
ஏம:- என்னாலி தாகாது போம்
நார ஈவிரக்க மேயிலாம லேயிதுபு கன்றாய்
எப்படியும் என்சபத மேஜயிப்பேன் நன்றாய்
ஏம:- இத்தருணமேசமர்த்தாயேன்றொரு கைபாரும்
இல்லையெனில்நாரதர்நீர் இல்லையெனத்தேரும்

டை பிபாண்டு மெட்டு

நார:- ஏழைப்பெண் சாவித்திரி மேல் முரண்டா
இப்படிச் செப்பவும் ஞாயமுண்டா

ஏம:-சுவாமி! எல்லாம் வல்ல அந்த ஈசனே தலையிட்டுக்கொண்ட நிமித்தம் அந்தமார்க்கண்டனுக்குநான் உயிர்கொடுத்தேன். அது உமக்கு ஒரு கேவலம்போலும்? நல்லது! இனி அதிகம்! பேசவேண்டுவதில்லை. இந்தக் காரியத்தில் நீர் ஜெயம்பெறு விட்டால்உமதுபேரைநீர்மாற்றிக்கொள்ளத்தான்வேண்டும்.

சரிசரி சரிசரி சாமுத்திர என்ற மெட்டு.

இராகம்-தேசிகம்-தாளம்-ஆதி.

பல்லவி.

நார:- பார்க்கிறேன் பார்க்கிறேன்
பந்தயம் வைத் தொருகை (பா)

அநுபல்லவி.

பரிதாபம் மரியாதை சிறிதேனும் அறியாய்நீ (பா)

சரணம்.

தீர்க்கமான கெர்வத்தாலே சேதிபேசக் கூடுமா
தெய்வகற்பு மாதர்முன்னே தீரச்செய்கை நாடுமா

திண்ணமாகுமா - நல்ல
எண்ணமாகுமா - சரி

சென்றேபார் நன்றேபு கன்றாய்நீ இன்றேநான் (பா)

நாயகனை தெய்வமென்று நண்ணுமிந்து தேசமே
நரர்கள் மாதர்தானேயென்று நடிப்பதுவும் மோசமே

நாடும் ரோஷமே - பின்
கேடும் தோஷமே - சரி

நாரதன் நானனல் வீராநீ யேபோனல் (பா)

பாரதநாட்டுப்பெண்கள் தங்கள் பர்த்தாவே தெய்வமென்பார்
பாமனையும் குழந்தையாக்கிப் பால்குடித் துறங்கென்பார்

பலித்திடாது பார் - பந்தயம்
கெலித்திடாது பார் - சரி

பாஸ்கர கிருஷ்ணர்சொல் சாஸ்பதந் தான்நீசெல் (பா)

[நாரதர் சென்று விடுகிருர், ஏமன் கண்கள் சிவந்து தூதர்களை அழைப்பித்து]

அற்புதப்பூதப் பெண்ணாகிய என்ற சிங்கள மெட்டு.

கண்ணிகள்.

இதேசமயத் தேவிரைந்தங் கேகுவீரே - தீர
ஏமதூதரே உக்ரோஷ மாகநீரே
அதாகுதத்திற் சத்யவானை அண்டுவீரே - சற்றும்
அஞ்சிடா தவனுயிரைக் கொண்டுநீரே - வருவீர்
இதுவோநாரதர் விரதம் - சரி
எப்படியும் நம் சபதம் - நிறை
வேறவே-பாருங்கள் - தீரமே - கூறுங்கள்
எத்திக்கும்பெயர் சித்திக்கும்படி
ஜே ஜே ஜே - என்று (இதே)

எமபடர்காள்! சொன்னது தெரிந்ததா? ஜாக்கிரதை. எல்லாரிடத்திலும் நாரதர்காட்டிநின்ற கையை நம்மிடத்திலும் காட்ட வந்தனர்போலும்? எங்கே பாசம், சூலம். செல்லுங்கள் சீக்கிரம்.

[புன்னகைபுரிந்து தலையை அசைத்துக்கொள்ளுகின்றான், பாசமும் சூலமுங்கொண்டு எமபடர்கள் சத்தியவானை, நோக்கிச் செல்கின்றனர்.]

காட்சி முடிகிறது.

---

## இரண்டாம் அங்கம். காட்சி ஒன்று.

இடம்:-முனிவர் ஆச்சிரமம்.

நடர்:-சாவித்திரி, சத்தியவான், எமதூதர்கள்.

சத்:-கண்மணி! சாவித்திரி! நீ ஏதோ இரண்டொரு தினங்களாக முகவாட்டத்தோடு இருக்கிறாய்! காரணம் தெரியவில்லை. உனக்கென்னகவலை? ஏதாவது இருந்தால் தெரிவி.

சாவி:-பிராணேசா! அப்படிக்கொன்றுமில்லையே? ஆனால் இன்றோடு மூன்று நாளாக நான் ஒரு விரதமனுஷ்டித்து வருவது தாங்களறிந்ததுதான், அத்துடன் 'தங்களிடம் நான் ஒருவரம் பெற்றுக்கொள்ளவும் வேண்டும்' என்று நினைக்கிறேன்.

சத்:-கண்ணே! அது என்ன வரம்?

ஆயமுதே தர்தேஜி என்ற மெட்டு.

இராகம்-அமீர்கல்யாணி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

சாவி:-எந்தனுக்கொருவரம் இனிதருளல்வேண்டும்
சத்:- என்னவரம்கேட்பாய் ஏந்திழையே-ஈவேன் (என்)
சாவி:-தடை-ஏதும்செப்பா தருளல்வேண்டும்-அது
சத்:- என்னவரம்கேட்பாய் ஏந்திழையே (என்)

தொகையறா

சாவி:-இன்றுமுதல் மூன்றுநாள் எங்குநாம் சென்றாலும்
இருவரும் ஒன்று கூடி
இணையே பிரிந்திடா தேகவே வேண்டுமென
எண்ணினேன் மனதுநாடி

பாட்டு எடுப்பு.

சத்:- இதுதானோ கேட்டவரம் இதற்குத்தா னேவிசாரம்
எந்தனன் இனிமகிழ்வாய் என்மெலிந்தாய் கண்ணே
ஏங்கவேண்டாம் பசி தாங்கவேண்டாம்-பெண்ணே
ஏங்கவேண்டாம் பசி தாங்கவேண்டாம்-நாதா (ஏங்)

விருத்தம்

பொன்னின்சா வித்ரிமாதே பூவொடுமண முற்றுப்போல்
நின்னையே பானுமென்னை நீயுமா யேற்றோம் நம்பால்
பின்னுமோர்பொருளுமுண்டோபிரியமாய்க்கொடுக்கவாங்க
என்னினும் நீ தான்கேட்ட திதுவரமீந்தேன் கண்ணே.

சத்:-சாவித்திரி! நீ ராஜமாளிகையில் சுகமே வசிக்கின்றபொழுது உன் சேடிமார் உனக்குப் பணிவிடைபுரிய ஆங்கு நீ வருஷம் ஒருமுறை அனுஷ்டிக்கப் பெற்றுவந்த அரியவிரதத்தை இப்போது இந்தக்காட்டில் எல்லாப் போகங்களையும் இழந்து கஷ்டப்பட்டுக்கொண்டு வருகிற இந்தக்காலத்திலும்தவறாது அனுஷ்டிக்கத் துணிந்த நின் சித்தவலிமையைப்பற்றி நான் அளவுகடந்த மகிழ்ச்சி அடைகின்றேன். ஆனால் மூன்று நாளாய் நீ ஆகாரம்எடுத்துக்கொள்ளாததுபற்றி என்மனது வாடுகிறது. நின் மாமன்மாமியாரும் கவலையடைகின்றனர். காதலி! நீ சென்று ஏதேனும் ஆகாரம் எடுத்துக்கொள்.நான் சென்று தந்தையார் உத்திரவுப்படி எக்கியத்திற் குவேண்டிய விறகு, காய், கனி முதலியன சேகரித்துக்கொண்டுவந்துவிடு கிறேன்.[கோடரியைத்தூக்கித்தோளிற்போட்டுக்கொண்டு]

தமயந்தியே என்ற வர்ணமெட்டு.

இராகம்-இந்துஸ்தான் கவாய்-தாளம்-ஆதி.

பல்லவி.

சத்:- சாவித்ரியே-விடை
தந்தனுப்புவாய் நீயே (சா)

அநுபல்லவி.

மேவிநான் வனஞ்சென்று விறகுகாய் கனி கொண்டு
விரைவில் வருவேனின்று மெலியாதே மெய்மருண்டு(சா)



120625

தோஹரு.

சாவி:-மணாளரே இப்போது வரமொன்று வாங்கினேன்
மறந்தீரோ வழுத்துவீரே

சத்:-மறக்கவில்லை ஆனாலின் மாமனும் மாமியும்
மனதுருகி வருந்துவாரே

அநுபல்லவி எடுப்பு.

சாவி:-வருந்தாதவர்பால்கேட்டு வருவேன்நான் தங்களோடு

சத்:-மணற் பாதையில் நடந்து வருவாயோ பசியோடு (சா)

சாவி:-கண்ணாளா! நான் உபவாசம் இருந்தாலும் களைப்படைந் திருக்கவில்லை. இன்றுமுதல் மூன்றுநாள் தங்களோடுஇருக்க வேணுமென்று இப்பொழுதுதானே ஒருவரம்வாங்கினேன்?

சத்:-ஆம்! அதற்கென்ன! நீ ஆகாரம் எடுத்துக்கொண்டிரு. அதற் குள் நான் வந்துவிடுகிறேன்.

சாவி:-நாதா! தாங்கள் தனியே காட்டுக்குப் போகவேண்டாம். நானும் தங்களோடு வருகிறேன். முன்னரே அநுக்ரகஞ் செய்துவிட்டு, இப்பொழுது மறுப்பது கூடாது.

[கண்ணீர் விடுகிறாள். சத்தியவான் அவள் அருகிற்சென்று கண்ணீர் துடைத்து]

பேதைப்பெண்பாவாய்! இதற்காக நீ ஏன் அழத்தொடங்கு கின்றாய்?-ஐயோ! நீ கண் கலங்குவதைக்கண்டு சகியாத எனக்கும் துக்கம் பெருகுகின்றன. நான் ஏன் இந்தப்பாழும் உடலெடுத் தேன்? நீ உனது ராஜபோகங்களை எல்லாம் இழந்துவிட்டு இந்தப் பரமதரித்திரனை ஏன் மணந்து இந்தக் கஷ்டமெல்லாம் அநுபவிக் கிறாய்? இதுவும் ஓர் விதிப்பயன்தானல்லது.[ஆலோசிக்கிறான்]

சாவி:-நாதா! நான் ஒரு கஷ்டமும் அநுபவிக்கவில்லையே? என் தகப்பன் வீட்டில் நான் அநுபவித்த சுகத்தைவிடத் தங்க ளோடிருந்து நான் அநுபவிக்கிற சுகம் அபரிமிதமன்றோ? இந்த இன்பம் அந்த இந்திரபோகத்தைவிடச்சிறந்ததாகுமே மணாளா! இதற்காகத் தாங்கள்ஏன் மயங்கவேண்டும்? 'இன்று தங்களோடு காட்டுக்குவர மட்டும் உத்திரவிட வேண்டும்' என்று திரும்பவும் தங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

சத்:-சுந்தரி! நின் அமுதமொழி இன்சுவை கேட்டு, என் துக்கமெல்லாம் எங்கேயோ பறந்துவிட்டது. நின் மாமன்மாமி இவர்களிடமும் விடை பெற்றுவா! புறப்படுவோம்.

[சாவித்திரி மாமன் மாமியிடம் விடைபெற்று இருவரும் காடு செல்லுகின்றனர். எமதூதர் சத்தியவானை நெருங்கச் சாவித்திரியின் விரதாக்கினி அவர்களைத் தகிக்கின்றது. அவர்கள் திரும்பச்சென்று எமனை நோக்கி நடுநடுங்கி]

சுவாமி! நாங்கள் சத்தியவானை அடைந்தோம். சாவித்திரி இடைவிடாது அவனோடு கூடவே இருப்பதால் எங்களை நெருங்கவிடாமல் அக்கினி தகித்துக்கொண்டிருக்கிறது.

[இதுகேட்ட எமதருமனுக்குக் கோபம் மூளுகிறது. இருகண்கள்பொறிபறக்க.]

அப்படியும் அவள் சொன்னளா என்ற மெட்டு.

இராகம்-பியாண்டு-தாளம்-ஆதி.

அடடா அடஎம தூதர்களே
ஆணுவமற்றிடு பேதர்களே
அஞ்சா தென்முன் நெஞ்சுது ணிந்திது
அறிவிக்க வந்திரோ பூதர்களே (அ)

ஆகட்டுமோர்கை பார்த்திடுவேன்
அவனுயிர்கொண்டிவண் சேர்த்திடுவேன்
அப்படிக்காரொரு கற்புளமாதவள்
அதிசயமுறும்படி தீர்த்திடுவேன் (அ)

கொடடாபாசக் கயிறிங்கு
கொலேபுரிசூலத் தடியெங்கு
கூசாதிதுமொழி கூறிடவந்திரே
கொணர்வேன் சபதமி தென்பங்கு (அ)

கொண்டா இங்கு பாசக்கயிற்றையும், சூலத்தையும்! எனக்கு வாகனமும் வேண்டியதில்லை. இது நாரதர்செய்த மோசம் என்று நினைக்கிறேன். "இப்படிச் சொல்லிவிடுங்கள்" என்று அவர் உங்களிடம் கேட்டுக்கொண்டாரா? உள்ளதைச் சொல்லிவிடுங்கள்.

எ-னு:-இல்லே ஆண்டவனே! அப்படிக்கொன்று மில்லே.

[நடுங்குகிருர்கள். எமதர்மன் உடனே புறப்படுகிருன்.]

சத்:-சாவித்திரி! நாம் பேசிக்கொண்டே வெகுதொலே வந்துவிட்டோம். முதலில் இதோ இருக்கிற விருட்சத்திலே ஏறிக் கனிவர்க்கம் கொண்டுவருகிறேன். பிறகு நாம்விறகும்சேகரித்துக் கொண்டு சீக்கிரம் திரும்பிவிடுவோம். அங்கு தாய் தந்தையர்கள் தனித்திருப்பார்கள். மாடவ்யனும் நமது வரவை எதிர்பார்த்துக்கொண்டிருப்பான் என்று நினைக்கிறேன்.

சாவி:-நாதா! தாங்கள் மரத்தின்மீது ஏறவேண்டாம். இதோ கீழே உதிர்ந்துகிடக்கிற கனிவர்க்கங்களேக்கொண்டுசெல்லலாமே?

சத்:-செல்லலாம்! ஆனல் விறகு வேண்டுமே? நீ கனிவர்க்கங்களேப் பொறுக்கிக்கொண்டிரு. நான் சிறிதுதூரம் ஏறி, அந்தக் காய்ந்த கொப்புகளே வெட்டிப்போடுகிறேன்.

[மரத்தின்மீது ஏறுகிறுன்.]

[நாரதர் சத்திய லோகஞ்சென்று பிரமதேவனிடத்திற் சொல்லிக் காருண்யதேவியை எமனுடைய இருதயத்தில் இருக்கும்படி அனுப்புகிருர். மரத்தின் மீது இருந்த சத்தியவான் சரசரவென்று கீழே இறங்கி]

கண்ணே சாவித்திரி! எனக்கேதோ ஒருவிதமான களேப்புண்டாகிறது. தலேவலிகாண்கிறது. தேகம் தளர்ச்சியடைகிறது. ஹா!

விருத்தம் முகாரி.

தேவிசா வித்திரிமாதே செய்யசெந் திருவே எந்தன்
ஆவியும் சோர்ந்து மெத்த அறிவது மயங்குதையோ
மேவியென் தேகமெல்லாம்வே தனே பொறுக்குதில்லே
சீவிய முடிவு காலம் சேர்ந்ததோ அறிகி லேனே

[சாவித்திரி பெருமூச் செறிந்து தானிருந்து, தன்மடியில் அவனேப்படுக்கும்படிசெய்வித்து முகத்திலுள்ளவேர்வையைத் துடைக்கிருள்]

சத்:- நந்தசீகேதாஞ என்ற மெட்டு.

இராகம்-கீர்வாணி-தாளம்-ரூபகம்.

பல்லவி

தலேநோய் வருகுதென் சாவித்திரிமாதே
சாவித்திரிமாதே சகியேனிப்போதே (தலே)

அநுபல்லவி.

நிலை தடுமாறுது நேர்ந்ததென் றிதே (தலை)

சரணம்.

கலங்குது மனம் ஏதோ கலவரம் தோணுது
கண்ணொளி யும்மங்குது காரணம் காணேன்
கரகரவெனச்சுழல் கவருதுமானே (தலை)

மார்புவங் தடைக்குது மருளுதென் உள்ளம்
வார்த்தை குளறுதுநா வறண்டதென்செய்வேன்
வருவது தெரிந்திலேன் வகைமோசந்தானோ (தலை)

கண்ணே! சாவித்திரி! ஆ என் செய்வேன்? என்னுடைய தலையிலே ஒரு சூலத்தைக்கொண்டு குத்துவதைப்போல் தோற்றுகிறது. என் ஆருயிரே! மனோரஞ்சிதமே! கிறுகிறு என்று தலை சுற்றுகிறது. மனதில் ஒருவிதமான கலவரம் உண்டாகிறது. இரண்டு கண்ணும் மங்குகிறது. நாவு தடுமாறுகிறது, வார்த்தை குளறுகிறது.

[புரண்டு புரண்டு உருளுகிறான். சாவித்திரி கண்களிலிருந்து நீர் தாரைதாரையாய்ப்பெருகுகின்றது. துக்கத்தை வெளிகாட்டாது.]

பிராணபதி பயப்படவேண்டாம். தங்களுக்கொன்றும் இல்லை. மரத்தின்மீது ஏறி இறங்கினதால் ஏதோ களை உண்டாயிருக்கலாம். தலையைப் பிடிக்கின்றேன்; தலைவலி நின்றுவிடும்.

சத்தி:- விருத்தம் முகாரி.

ஒருநாளும் என்னுடனே காடுகாண
ஒண்டொடிநீ பின்தொடர்ந்து வந்தாயில்லை

திருநாளின் கிதுநடக்கப் போகுதென்றோ
சேயிழைமுன் அறிந்துநனி தெரிந்துவந்தாய்

மருவினிய கணவனொடு வாழ்வுதோற்றுன்
மங்கிலிய மிழப்பதற்கு வருடமாச்சோ

தெருவிலுனைப் பரிதவிக்க விட்டேன் பாவி
செத்தாலும் நற்பதவி சேரேன் கண்ணே

ஆ என் அன்பே! 'எனக்கு இப்படிவருமென்று நீ முன்னமே அறிந்துதான் இன்று என்னைத் தொடர்ந்து இக்காட்டிற்கு வந்

தாய்' என்று நான் அறிந்தேன். (மேலே நோக்கி உற்றுப்பார்த்து) ஆ! ஹா! என் முன்னே ஒரு பயங்கரமான புருஷன் நிற்கின்றான். அவன் யார் என்று தெரியவில்லை. கண்மணி! அதோபார்!

[கையை நீட்டிக் காட்டுகிறான்.]

நான் ஆபரணங்கள் கண்டேன் என்ற மெட்டு.

இராகம் தேசிகதோடி-தாளம் ரூபகம்.

இதோ-வாரானொருவன் மானே-என்னை
வாவென்றழைக்கின் றானே-இதோ (வா)

பாரெல்லாம் நடுநடுங்கப் பாசமும் சூலமுங்கொண்டு
பையவே மனம் நையவே வதை செய்யவே-இதோ (வா)

கன்னங் கறுப்புநிறம் கண்களோ சிவப்புநிறம்
காணப்பயங்கரமே கலங்குதெந்தன் மனமே
கத்தியீட்டியே வைத்துக் காட்டியே
குத்தி நீட்டியே - இதோ (வா)

கோபப்பொறி பறக்கக் கொடுமையுடன்சிறக்கக்
கோரஉருவங்காட்டிக் குரோதமிகப்பாராட்டிக்
கொல்லுவேன் கொன்று செல்லுவேன் என்று
பல்லுடன் மென்று - இதோ (வா)

கனைத்து விழியுருட்டிக் கடுகடுத்து மிரட்டிக்
கருவிச் செறுமிநின்று கசக்கிப் பிழிவேனென்று
கட்டவே கயி றெட்டவே என்னைக் கிட்டவே-இதோ (வா)

ஆ! என் காதற் கிளியே! நான் மரத்தின்மீது இருந்த சமயம் இங்கு நிற்கின்ற இந்தப் பயங்கரமான உருவம் சற்றுத் தூரத்தில் இருந்து, என்னை நோக்கி வெகு பரபரப்புடன் வந்துகொண்டிருந்தது. இப்பொழுது என் சமீபத்தில் வந்து ஒருகையினால் சூலத்தை ஓங்கிப்பிடித்துக்கொண்டு, ஒரு கையினால் என் உயிரைத் தன்னுடன் கொண்டுவந்துள்ள கயிற்றால் பிணித்துக் கட்டுகிறது. எனக்குப் பயங்கரம் அதிகமாயிருக்கிறது. ஆ! எனக்கு அந்திய காலம் கிட்டிவிட்டதென்று உறுதிப்படுகிறது. என் கண்ணே! நான் உன்னைவிட்டுப் பிரிகின்றேன். உன்னை நிரபராதியாய் விட்டு விட்டதற்காக என் மனது தவிக்கின்றது. என்செய்வேன்!

[கண்ணை மூடிமூடி விழிக்கின்றான்.]

சாவி:-(மனதினுள்)ஆ! தெய்வமே! நாரதர்கூறிய காலம்இதுதான் போலும்? நாதர்? யார் அது? எங்கே நிற்கின்றார்கள்? எனக் கொன்றுந் தெரியவில்லையே! [சுற்றிச் சுற்றிப் பார்க்கிறாள்]

சாவி:- பட்டாபிஷேகம் படைத்திந்த என்றமெட்டு.

இராகம்-தேசிகமுகாரி-தாளம்-சாப்பு

கண்ணிகள்

ஐயோவென்நாதரும் ஆயுள்முடிந்ததா
ஆவதழிவத வன்செயலென்பார்
அப்படித் தானச்சுதா-அடியாளென்
கற்பழிந்து போச்சுதா- உண்மை
யாமீதனி யாயமினி யார்க்குரைப்பேன்
யான் தனி எதுசெய்வேன் (ஐ)
பொய்யல்லநாரதர் போற்றியுரைத்தது
போலோர்வருஷமும் பூர்த்தியிங்காச்சு
பொல்லாத காலந்தானோ-திடீரெனச்
சொல்லாமல் வந்ததேனோ- இந்தப்
பூவையைப் பொன்றவிட்டுப் போகும்விதம்
பூமிபொறுத் திடுமோ (ஐ)
ஆவியுடலும்போல் ஆணும்பெண்ணும்நாமோர்
அன்பிற்கலந்ததை ஆகாமலாக்க
ஆண்டவன் சம்மதியோ-நமக்கிது
மூண்டபெரும் விதியோ- தங்கள்
அன்னை தந்தை யாமவருக் காதரவிங்
காரினி என்துரையே (ஐ)

[கடவுளை முன்னிலைப் படுத்தி]

ஹே! ஜெகரட்சகா! ஆபத்பாந்தவா! இதுவும் உன் திருவுளச் செய்கையோ! ஐயோ! இனி என் செய்குவேன்? நான் ஆதரவற்ற ஓர் அனாதையானேனே! "நீயே தஞ்சமென்று சதா உன்னையே சிந்தித்துக்கொண்டிருக்கிற ஆன்ம கோடிகளுக்கு ஏற்படுகிற யாதொரு துன்பத்தையும் நிவர்த்திக்கும் பொருட்டே நீ உள்ளும் புறமும் உகந்து நிறைந்திருக்கிறாய்" என்று வேதமும் முறையிடுகிறதே! அதுபொய்யா? ஹா தெய்வமே! 'கடவுளை நம்பினோர் கைவிடப்படார்' என்ற முதுமொழியை நான் முற்றிலும் நம்பின

வள் அன்றோ? என் விவாகத்திற்கு முன்பு 'நின் நாயகனுக்கு இன் றிருந்து இனியோர் ஆண்டிற்குள் ஆயுள் முடிவு" என்று நாரத முனிவர் உரைத்தும் 'இவரையே நான் மணப்பேன்' என்று உறுதி பூண்ட என் கற்பின் மகிமைக்கு விமோசனந்தான் என்னே! 'தெய்வந்தொழா அள் கொழுனன்தொழுதெழுவாள் பெய்யெனப் பெய்யும்மழை" என்ற வாக்கியம் யாண்டுபோய் ஒழிந்தது? ஹா! எல்லாம்வல்ல ஈசா! இனியான் என்செய்குவேன்?

[முந்தானையினால் முகத்தை மூடிக்கொண்டு கதறு கிருள். இவைமுற்றும் ஞாபகமாய்க்கேட்டிருந்த சத் தியவான் கண்ணை விழித்துச்சாவித்திரியை நோக்கி]

விருத்தம் முகாரி.

கண்ணிழந்த தகப்பனையான் கலங்கவைத்து;
கானகத்தில் மடிவதொரு கவலையில்லை,
காசினியை யான்தனித்த காலம்பார்த்து;
கஜகேது கவர்ந்ததொரு கவலையில்லை,
மண்ணினுனை விதவையெனக் கூறநீதான்
மங்கிலியம் இழப்பதற்கும் கவலையில்லை,
மாதவங்கள் பலசெய்து மகிழ்ந்துபெற்ற
மாதாவும் மயங்குவளக் கவலையில்லை,
புண்ணியஞ்சேர் நாரதமா முனிவர் பூமான்
பூரணமாய் என்னுயுள் முடிவுகாலம்,
"பூவிலொரு வருஷமெனப்" புகலக்கேட்டும்
பொன்றுநின் வாக்குறுதி போற்றிக்காக்கும்
வண்ணமென மணந்ததொரு வாய்மைக்காக
வாய்த்தபெருங் கற்பரசி மங்காயிங்கு,
மலையுருக மரமுருக உருகமண்விண்
மனமுருகியகமுருகி மாள்கின்றேனே.

கண்மணி! சாவித்திரி! நின் கற்பின் மகிமையே மகிமை. நின்போன்ற கற்பரசி இதுவரை உலகத்தில் இருந்ததாக நான் சரித்திர மூலமாயும் படித்தறியேன். நமது விவாகத்திற்கு முன் னரே 'நான் அற்பாயுள் உள்ளவன்' என்று நாரதமுனிவரால் நீ அறிந்துங்கூட "மனத்தால் உறுதிசெய்த பின்னர், எது காரணம்

பற்றியும் அதை மாற்றுவது கற்பிற்கழகல்ல" என்றுநின்சத்தியப் பிரமாணத்தையே சாதித்து நின்றனை. ஆ! இல்லறத் திசைந்த நல்லறப்பாவாய்! என்னே நின் கற்பு! என்னே நின் காதல்! இவ் உலகில்மட்டல்ல, மூவுலகிலுங்கூடக் கற்பின் கடவுள் நீயே எனப் புகழ்ந்து பாராட்டப் பெறுவாயாக! உனக்கு யாதொரு குறைவும் அணுகாது. நின் மனமே பரிசுத்தமுடையது. நீ எல்லாம் அறிந் தவள். ஆயினும் நான் உனக்கு ஒன்று சொல்லக்கடமைப் படுகின் றேன், "ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும் மாண்டார் வருவரோ மானிலத்தில்" என்றபடி இனி நீ என் மரணத்தைப் பற்றிச் சிந்தியாமல் என் மாதா பிதாக்களுக்கு ஓர் ஆதரவாய் இருந்து, அடிக்கடி புத்திரவாஞ்சையால் துக்கமடைகிற அவர்கள் மனதைத்தேற்றி, அவர்களுக்குச் சிசுருட்சை செய்துவருவாயாக. அல்லாமல் என் மரணத்தால் நீயும் அவர்களும் துக்கமடைந்து, ஒருவேளை நீங்கள் உயிர்விட நேருமேல், அப்பாவங்கள் முற்றும் எனக்கே சம்பவிக்கும். இனியோர் ஜென்மத்திலேனும் நின்னையே யானடைவதற்கு நோம்பியற்றுகின்றேனதலால் அங்ஙனமே கட வுள் அருள்செய்ய நீ வரமளிப்பாயாக. [கண்ணீர் சொட்டுகிறது.]

[சாவித்திரியின் கரத்தைப்பற்றிக் கன்னத்தி லொற்றிக் கண்களை விழித்து விழித்து மூடு கின்றான். உயிர்போய்விடுகிறது. தன் மடியி லிருந்த அவன் தலையைக் கீழே கிடத்தித் திரும்பிப் பார்க்கிறாள். கறுப்பும் வெளுப்பும் கலந்த தடித்த தேகத்தோடும் சிவந்த கண்க ளோடும்கூடிய ஓர் உருவத்தைக்காணுகிறாள்]

பையல் மாரன் என்ற வர்ணமெட்டு.

இராகம்-அமீர்கல்யாணி நோட்-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

| | | |
|---|---|---|
| சாவி:- | ஆரையாநீர் | பேருமென்ன |
| | யானறிய | வேணுமே |
| எம | ஆரணங்கே | கூர்மையாக |
| | ஆய்ந்துபார்க்கத் | தோணுமே |
| சாவி:- | மானிடர்கள் | தானறியா |
| | வாருகண்டேன் | பூமனே |

ஏம:- மானேசத்ய வான்தனுவி
வாங்கவந்த ஏமனே

தோஹைறு.

சாவி:- ஆன்மகோ டிகளுடைய ஆயுளது முடிவிலே
ஐயனும் தூதர் வந்து
ஆன்றுயிர் கவர்வரென் றறிந்துளேன் தாங்களே
அன்புடன் நேர்புகுந்து.

ஷ கண்ணி எடுப்பு.

ஆளனுடல் மாளுமாறு
ஆக்குதனின் காரணம்
ஆதியோடு நீதியாக
அறைகுவீர்சம் பூரணம்

தோஹைறு.

ஏம:- அதுதேவ ரகஸியம் ஆதலால் யான்செப்ப
ஆகாதாகா துனக்கே
அவ்வாறு செப்புதல் அழகன்று மேலுமோர்
அவமானமா மெனக்கே

ஷ கண்ணி எடுப்பு.

அற்புதஞ்சேர் கற்பரசி
ஆயிழைநீ செல்லுவாய்
அன்னை தந்தை தன்னிடத்தில்
ஆனவாறு சொல்லுவாய்

[சத்தியவான் உயிரைப் பாசக் கயிற்றால் பிணித்த வண்ணஞ் செல்லுகிறான். சாவித்திரி அவன் பின் தொடர்ந்துஇரண்டுகரங்களையும்கூப்பித்தொழுது]

சுவாமி! முதன்முதல் தங்களுடைய சரீரக் கூறுபாடுகளினால் "தாங்களொரு மனுஷ்யரல்லரென்றும்,தேவகணத்திற்சேர்ந்தவ" ரென்றும் மாத்திரம் நான் அறிந்துகொண்டேன். பின்னர் தாங்கள் அருளிச்செய்தமறுமொழியினால்தங்களைஇன்னார்தானென்று நன்றாய் உணர்ந்து கொண்டேன். ஆயினும் ஆன்மாக்களுடைய ஆயுட் காலமுடிவில் தங்களது தூதர்கள் வரவேண்டிய திருக்கத் தாங்களே வந்ததின் காரணம் நான் அறிந்துகொள்ளாமல் செல்வ தெப்படி? சுவாமி! கருணையோடு அருளிச் செய்தல் வேண்டும்.

எம:-பெண்மணி! உன் கணவன் ஆயுள் முடிந்ததென்றும், அதனால் அவன் இறந்துபட்டான் என்றும் மாத்திரந்தானே நீ தெரிய வேண்டியது? மற்ற விபரங்களைப்பற்றி உனக்கென்ன தேவை? அதனால் "உனக்காவதென்ன, அழிவதென்ன?" ஒன்றுமில்லை. ஆகவே நீ சென்று அவனது அன்னை தந்தையருக்கிந்தவிபரத்தை யுரைத்துத் துக்கங் கொண்டாடிப் பின்னர் அவனுக்குச் செய்யவேண்டிய உத்தரகிரியைகளைச் செய்து முடியுங்கள்.

சாவி:-பகவானே! அப்படிச் சொல்லக்கூடாது! என்பிராண நாதனைப்பற்றிய விபகாரமானதால் அதைப்பற்றித் தங்களிடம் வினவி யறியாமல் இருக்க முடியாது. [கிட்டிச்செல்லுகிறாள்]

அம்பிகை பாலனே என்றபியாண்டு மெட்டு.

இராகம்-கல்யாணி-தாளம்-ஏகம்.

பல்லவி.

புண்ணிய பூபனே போற்றுஞ் சொரூபனே
பூதா சமேதா வினோதா (பு)

அநுபல்லவி.

மண்விண் நாடும் வணங்கிக்கொண் டாடும்
கண்கண்டு தேடும் காட்சிமனுப் பூடும்
கருணையிலொரு க்திநீடும். (பு)

தொஹறா.

கடாட்சிக்க வேணுமே காரணம் தாங்களே
கடுகஇவண் வந்தவாறு

எம:- கன்னியது ரகஸியம் கழறவே முடியாது
கட்டாய மென்று தேறு

சாவி சரணத்தொடர் துரிதம்.

கடவுள் போன்றிங் கென்முன் நின்ற கமலகஞ்சபாதமே
கருது வோருக் கருளு கின்ற கண்ணியப்ர மாதமே (பு)

எம:-ஏ பெண்பாவாய்! கேவலம் நீயோ ஓர் மானிட ஜென்மம். நீ கேட்கின்ற விஷயமோ தேவரகஸியம். இதை யறியாது திரும்பத்திரும்பப் பேசுகின்றனையே! உனக்கும்இந்தக்கேள்விக்கும் என்ன சம்பந்தம்? சீக்கிரம் திரும்பிச்செல்.

[விரைந்து செல்லுகின்றான். அவனைப் பின்தொடர்ந்து]

சாவி:-சுவாமி! "மானுடர்களைவிடத் தேவர்களே உயர்ந்தவர்கள்' என்பதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன். என்றாலும் "தேவர்களும் மானுடராய்ச்சென்னமெடுத்தன்றி தெய்வ நிலையறியார்கள் தேற்றமிதுதானே'' என்றவாக்கியப்படி தேவர்களும் மனுஷ்யர்களாய்ப் பிறந்துதான் முத்திநிலை யறியத் தகுந்தவர்களாய் இருக்கிறார்கள். அங்ஙனமாகத் தாங்கள் மானுட ஜென்மத்தைப்பற்றி இழிந்துரைப்பது பொருந்த மாட்டாதென்றுநினைக்கிறேன் தயவுசெய்துவிடையளித்தல்வேண்டும்.

[எமதருமன் அவளைத்திரும்பிப் பார்த்து.]

போப்போ என்னிடம் என்ற மெட்டு.

இராகம்-தேசிகம்-தாளம் ஏகம்.

பல்லவி.

நீதான்-செப்புதல் தப்பிதம் ஒப்பிடேன்
சீக்கிரம் திரும்பிச் சென்றிடுவாய் (நீ)

அநுபல்லவி.

இப்படிப் பேசுவார் எவரையுங்காணேன்
இதிலுனக் காவதிங் கேதெனத் தோணேன்
ஏதேதோ பேதக மோதத்து ணிந்தனை (நீ)

சரணம்.

இருவினைத்தொடக்கத்தால் இகத்தினில்பிறந்து
இடர்பல அடைந்துபின் இறத்தலை மறந்து
இல்லாத வல்லமை சொல்லத் துணிந்தனை (நீ)

மாயப்ரபஞ்சமோர் வாழ்வென நம்பி
மடிவதும் பிறப்பதும் வறுமையில் வெம்பி
வதங்கும் பதர்கட் கிதங்கி டைக்குமோ (நீ)

மானுடரெமைவிட மகிமைபெற்றாரோ
வருவதை யுணர்ந்திடும் மருமங்கற்றாரோ
வம்பிது தெம்புவி ளம்பத்து ணிந்தனை (நீ)

ஏ பெண்பாவாய்! மாயாசொரூபமென்ற இப் பிரபஞ்சக்கடலில் பாவ புண்ணிய மென்ற பந்தக் கயிற்றால் பிணிக்கப்பட்டு, அஞ்ஞான மென்ற அந்தகாரத்தால் தட்டுக் கெட்டுத் தடுமாறி

ஆசை என்ற சுழற்காற்றில் அடிபட்டுப் பிறவி என்ற அலைகளினூடே அலமோதித்திரிந்து, நரகம் என்ற கருப்பையிற் புகுந்திறந்து உழலப்படுகிற துரும்புபோன்றசிற்றறிவும்சிறுதொழிலுமுடைய ஆன்மகோடிகளையா நீ "தேவரினுஞ் சிறந்தவர்" என்று சொல்லத் துணிந்தனை! 'பேதைமை என்பது மாதர்க்கணிகலம்" என்பது மெய்யே என்று நின்னிடத்தில்தான் நான் பிரத்தியட்சமாய் அறிந்தேன். "எண்ணரிய ஆன்மாக்கள் இலக்கணம் கூறுங்கால் புண்ணியத்தால் பாவத்தால் புண்ணியபாவத்தால் பொன்னுலகு நரகுதரை போக்குவரவுடையார்" என்றபடி சிருஷ்டியாதி காலந் தொட்டுப் பூமியிலே பிறந்து இன்பதுன்பங்களைச் சம்பாதித்துச் சொர்க்காதி நரகங்களிலேசென்று அவற்றை அனுபவித்து எஞ்சி நின்ற கன்மவிசேடத்தால் மீண்டும் பூமியிற் பிறந்து, இவ்வாறு சக்கரச்சுழல்போல் உழன்றுதிரிகின்றஆன்மாக்களென்று நீ அறிந்திலைபோலும்? சரி உன்னுடைய நேத்திரத்திற்கு நான் புலப்பட்டதே பிசகென்று முடிகிறது. இனி நீ என்னைப் பின்பற்றாதே.

[விரைந்துசெல்கிறான். சாவித்திரி அவனைத்தொடர்ந்து,]

நாபோலுத்தாரா என்ற வர்ணமெட்டு.

இராகம்-தேசிகதோடி-தாளம்-ஆதி.

பல்லவி.

தேவாகருணைப்ரதாபா மூவாத ரூபசொரூபா (தே)

அநுபல்லவி.

மேவியடி யாளுங்களை வேண்டுவதிங் கொன்று
விரும்புதல் நன்று-கோபம்
பெருந்தகை யன்றி (தே)

சரணம்.

கடவுளே யன்றிக் காணுமெத் தேவரும்
கன்மபந்தத்தால் கட்டுண்டலைகுவர்
காண்பிரத் தாட்சி - நற்
கதிபெறல் மானுட ஜனனமே வேறொருக்
கானுமேயிலை சூட்சி (தே)

சுவாமி! கோபம் இல்லாமல் கேட்டருளல்வேண்டும். பிறவித் தோற்றம் எழுவகை. அதில் தேவர் பதினறு லட்சம் யோனி பேதம். இப்படியே ஒவ்வொன்றின் கணக்குப்படி மொத்தம் எண்பத்துநான்குலட்சம் என்று பெரியோர் கணக்கிடுகின்றனர். பிறப்பு, இறப்பு, ஆசை, நோய், பயம் முதலியன துன்பங்கள் தேவர்களுக்கும் உண்டு "தீயவசுரர் பகையுண்டு; தீராப்பிறவித் துயருண்டு, மாயுந்தன்மை யுண்டானல் வானேர்க்கென்னே வள னுண்டே" என்றபடி மானுடருக்குத்தாங்கள் சொன்ன இலட்சணங் கள் முற்றும் தேவருக்கும் உண்டென்பதை மறந்துவிடக்கூடாது. அதுமாத்திரமன்று. தேவர்கள் ஞானத்திலேசத்தசூனியமுள்ளவர் கள். எந்தக்காரியத்தையும் வந்தபின் ஆய்பவர்கள். துன்பம் வந்தால் கடவுள் உண்டென்று அவரைச் சரண்புகுவார்கள். அது தீர்ந்ததும் தங்களைத்தாங்களே கடவுளென்றகங்கரித்து, மமதை கொண்டு திரிவார்கள். இதற்கத்தாட்சி தங்களைப்போன்ற எத் தனையோ ஏமன் முதலிய தேவர்களுக்கெல்லாம் அரசனை இந்தி ரனே யாவர். "சீவர்கள் மெஞ்ஞானம்பெற எடுப்பது மானு டம். தேவர்கள் அஞ்ஞானங்கெட எடுப்பது மானுடம்" என்பதி ஞலேயே எழுவகைப் பிறப்பினுள்ளும் மனிதப்பிறப்பே எல்லா வற்றினும் சிறந்ததென்பது நமக்கு நன்கு விளங்குகிற தல்லவா?

ஏம:- விருத்தம்.

பாவமாம் புண்யமாமோர் பந்தத்தால் பிணிக்கப்பெற்றுத்
தாவர மனுட மாதி தனித்தனி பிறவா கிற்கும்
சீவரை உயர்ந்தோ ரென்ருய் சிற்றறி வுடையோரென்னத்
தேவரையிகழ்ந்து நின்ருய் தெளிந்திட ஸ்மிருதி என்னே

ஹே! பெண்பாவாய்! தேவர்களைவிட மனிதர்கள்தான் சிறந் தவர்களென்று திரும்பத் திரும்பச் சாதிக்கின்றனை. இது நின் சொந்தக்கருத்தா; அல்லது ஸ்மிருதிப்பிரமாணமுண்டா?.

சாவி:-சுவாமி ஸ்மிருதிப் பிரமாண மாத்திர மல்ல, யுத்திப்பிர மாணமும், அநுபவப் பிரமாணமும் உண்டு. "நீடு தேவராய் நின்றிடு சீவரும் வாடுபிறவி விடாதுழன் றவர் பாடும் பழவினே பலகடந்தாயினும் வீடுபெறுவதுமானுடந் தன்னிலே" என்ற வாக்யம் ஈஸ்வரனது திருவாக்கினின்றெழுந்தது. இதுதான் வேதம். இதிலிருந்து இதிகாசம், புராணம் முதலியன விரிந்

துள்ளன. எந்தப்புருஷனுடைய மனமானது ப்ரம்ம ஐக்கியத்தில் ஒருக்ஷணப் பொழுதேனும் அழுந்தப்பெறுமோ அந்தப்புருஷனைவன் இருவினைப்பிணிப்பிலிருந்து விடுபட்டுப் பிறவி ஸாகரத்தை நீந்தி, ஈஸ்வரனோடு இரண்டறக்கலக்கின்றான். ஐயனே! தேவகணத்தில் யாராவது எப்பொழுதாவது அங்கிருந்தபடியே சாயுட்சியம், (அதாவது சீவாத்மா பரமாத்மாவோடு இரண்டறக்கலத்தல்) பெற்றிருக்கிறார்களா? அப்படியிருந்தால் மனதிரங்கி அறிவிக்குமாறு பிரார்த்தனை.

ஏமஃ-(ஆலோசித்து, தனக்குள்) ஏது இப்பெண்மணியைநாம்சாதாரணமாக நினைத்து வார்த்தை கொடுத்தோம். "அது கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டது" என்றாயிற்று. நல்லது இருக்கட்டும். இவள்கேட்கின்றகேள்விகளுக்கு நம்மால் விடைபகர முடியாது. விஷயத்தைச்சுருக்கி, இவளை அனுப்பிவிட்டுநாம் சீக்கிரம் செல்லுவோம். (அவளைப் பார்த்து) சாவித்திரி! நாம் ஏதேதோ பேசிக்கொண்டே வெகுதொலை வந்துவிட்டோம். நீ மிகவும் களைத்துவிட்டாய். இந்தச் சத்தியவான் ஒரு புண்ணிய புருஷன். இவனைத்தூதர்களால் கொண்டுவர முடியவில்லை. ஆகையால் நானே வரவேண்டியிருந்தது. நீ கேட்டகேள்விக்கு விடையளித்தேன். இனிநீ செல்லலாம்.

[விரைந்து செல்லுகின்றான்.
அவனைப் பின்தொடர்ந்து,]

சாவி:-சுவாமி! ஒருவர் மற்றொருவரோடு பத்தடிதூரம் தொடர்ந்து நடந்தால் அவர்கள் அதிநட்பாளர் ஆகின்றார்கள். நான் தங்களோடு எவ்வளவோ தூரம் நடந்து வந்திருக்கிறேன். ஆகையால் தங்களதுசிநேகம் எனக்குக் கிடைத்திருக்கிறது. அச்சிநேகத்தைக்கொண்டு நான் ஒரு பிரார்த்தனை செய்துகொள்கிறேன். அறம் பொருள் இன்பம் வீடு என்றபுருடார்த்தம் நான்கில் முன்னது இரண்டு இல்லறத்திலும், பின்னது இரண்டு துறவறத்திலும் சேர்க்கப்பட்டிருக்கிறது. இல்லற ஒழுக்கத்தைச் சரிவர நடத்திவருகின்ற தம்பதிகளுக்குத்துறவறம் தானே வந்தடைகிறது. அல்லாதவருக்குத் துறவறம் சித்தியாது. அது சித்தியாது போனால் அவர்கள் எடுத்த ஜன்மத்திலாயபயன் வியர்த்தமாகிறது. ஈண்டு நானும் என் பர்த்தாவும் இல்லற ஒழுக்கத்தை இசைந்து நடத்தி

வருகிறதருணம் "வெண்ணெய் திரளுமுன் தின்னம் உடைந்தது" என்ற பழமொழிபோல் என் பர்த்தாவின் உயிரைத் தாங்கள் கவர்ந்து செல்வது தருமமல்ல. ஆகவே என்மீது கிருபைவைத்து, என் நாதன் உயிரைக் கொடுக்கவேண்டும்.

[இதுகேட்ட எமனுக்குக் கோபமுண்டாகிறது. அவளைக் கடிந்துநோக்கி,]

துரா-த்ாவ்ரியூராசாவரீயா என்ற பார்ஷி மெட்டு.

இராகம்-தேசிகாப்பி-தாளம்-ஆதி.

பல்லவி.

உந்தன்-பேதமைஎன்றே பேணுகின்றேன்-முழுதுணர்ந்தும்
பெண்புத்தியின் புத்தியென்று
பேசுவார்பெ ரியோர்நன்று (பே)

அநுபல்லவி.

யாது துறையறிந்திங் கிதுமொழிந்தனை நீ (பே)

சரணம்.

எட்டாத்கொம்புத்தேனை இச்சித்திடுமுடவன்
எண்ணிஎண்ணியுருகி ஏங்கிச்செத்தாற்போலிவன்
ஏந்திழை யேஇது கேட்டாய்-எனை
ஏளனமா யெண்ணிப் போட்டாய்
ஈசன் விதித்தவாறு
எதுதவ றிற்றேகூறு
எமனெனத்தெரி யாது திடத்துடன்
என்னே ரிருந்து
நின்னு தனுயிர்
தன்னைக்கொ டென்ற துந்தன் (பே)

ஏ பெண்பாவாய்! "ஊழிற் பெருவலியாவுள மற்றொன்று சூழினுந் தான்முந் துறும்" என்றபடி உன் காதன் ஆயுள் முடிந்துவிட்டது. நீ அவனை மீட்ட நினைப்பது நின் பேதமை. 'ஈசன் விதித்தது என்றும் பொய்க்காது' என்ற பழமொழிகூட நீ கேட்டறிந்தாயில்லை போலும்? சீக்கிரம் திரும்பிச் சென்றுவிடு.

[செல்கின்றான், சாவித்திரி அவனைப் பின்தொடர்ந்து]

கரபாரபோம்பர்சே என்ற வர்ணமெட்டு.

இராகம்-அமீர்கல்யாணி-தாளம்-ஆதி.

பல்லவி.

ஏழையொருவிண்ணப்பம் ஏற்றருளுதல்வேண்டும்
ஈவிரக்கமிருந்த எமபதியே (ஏ)

அநுபல்லவி.

பாழும்பிறவிக்கடல் பாசத்துழன்றுவரும்
பாவிகளைத்தண்டிக்கும் பரிதியே (ஏ)

சரணத்தொகையறு.

பதினறு வயதென்று பரமனர் விதித்திட்டவிதியே
பாலன் மார்க்கண்டனும் பக்தியாய்ச்சென்றுசன்னிதியே
துதிநாறு பலகோடி சொல்லவும் தாங்களத்தறியே
தோன்றியுயிர் கவர்ந்திடச் சோதியாய் வந்துநற்கதியே

பல்லவித்தொடர்.

தொல்லுலகம்புகழத் துலங்குதீர்க்காயுள் தந்தார்
சொன்னமுன்னயுளது தொகைமறந்தார் (ஏ)

தர்மப்ரபுவே! "ஈசன் விதித்தது என்றும் பொய்யாகாது" என்றீர்கள். முன்னொரு காலம் மார்க்கண்டனுக்குப் பதினறு வயது விதித்துவிட்டுப்பின்னர் அவனது பக்திவசப்பட்டு'என்றும் சிரஞ்சீவி' என்றருளிச்செய்தஈசன் தானு! அல்லதுஇப்போதுவேறு ஈசனு? அப்போது பாசக்கயறுவீசி, அவனைப்பற்றியது தாங்கள் தானு! அல்லது வேறு எமனு? மேலும் 'பெண் புத்தி பின் புத்தி' என்றீர்கள். "எண்ணறக்கற்று எழுத்தற வாசித்தாலும் பெண் புத்தி(தன் புருஷனுக்கு முன்னர்)பின் புத்தி" என்றுதான் அந்த வாக்கியத்தின் அர்த்தம். ஒரு ஸ்திரீ எவ்வளவு புத்திசாலியாய் இருந்தாலும் தன் பர்த்தாவுக்குமேல் அவள் புத்திசாலி என்று காட்டிக்கொள்ளக்கூடாது. இப்படித்தான் நூலாசிரியர் கருத்தொன்று கிடக்கத் தாமொன்று சொல்லிக்கொண்டு போவது உரையாசிரியர் வழக்கம். தாங்களும் அப்படிக் கருதலாமா?

ஏம:-(தனக்குள்) ஒகோ! நாரதரும் இப்படித்தான் சொன்னர். ஆனல் அவர் சொன்னதற்கும் இந்தப்பெண்மணி சொல்வதற்கும் வித்தியாசம் இருக்கிறது. அவர் "நீ மார்க்கண்டனுக்

காகஈசனிடத்தில் உதைபட்டாய்'' என்றார். அதைக்கேட்டு நமக்குக்கோபம் உண்டானது. இப்போது இப்பெண்மணி சொல்வதுகேட்டு நமக்குச் சந்தோஷம் உண்டாகிறது. இது தான் பெண்களுக்கேற்பட்ட சாகசகுணம். ''இன்சொல்லா லன்றிஇருநீர் வியனுலகம்வன்சொல்லாலென் றும்மகிழாதே'' என்ற வாக்கியத்தின் உண்மை நாமே அநுபவித்தறிந்தோம். (சாவித்திரியை நோக்கி) ஹே உத்தமப்பெண்பாவாய்! நின் அமுதம்போன்ற வாக்கியம் மூடர்களுக்குக்கூட அறிவை அபிவிர்த்தி செய்யக்கூடியதாயும், ஆழ்ந்த பொருளடங்கப் பெற்றதாயும், மிகுந்த நன்மை பயக்கக் கூடியதாயுமிருக்கின் றன. கேட்கக் கேட்கப் பரமானந்தமா யிருக்கிறது. என் செய்யலாம்? எனக்கதிகாரம் இல்லாத ஒன்றைநீகேட்கிறாய். ''ஈத்துண்ணார் செல்வமும் நல்கூர்ந்தார் இன்னலமும் பூத்த லில் பூவாமை நன்று'' என்றபடி நின்மீது எனக்குள்ள இரக் கம் யாதொரு பயனற்றதாய் முடிகிறது. ஆகவே இனி நீ என்னைப் பின் பற்றாதே சென்றுவிடு.

[காருண்யதேவி அவனது இரு
தயத்தில் வந்து அமருகிறாள்.]

சுந்தரப்பியாரி என்ற வர்ணமெட்டு.

இராகம்-கவாய்-தாளம்-ரூபகம்.

சா:- நாயகன் மாண்டு நானிருப்பது
நல்லறமல்ல தர்மபூபதி (நா)

இராகம்-பியாண்டு-தாளம்-ஆதி.

ஏம:- நன்றா யிருக்கிற தூர்தன் கதை
நாட்டினிற்காணேன் புதுமையிதை-இனி
நாடாதே மனம்
வாடாதே இது
கூடாதே போப்போ (நன்)

சா:- மனதுவைத்தேநீர் மாங்கல்யப்பிச்சை
வழங்குவீரையா தர்மபூபதி (மன

ஏம:- மாதேயிதற்கா வருந்திடாதே
மாண்டார்பிழைப்பாரோ மண்ணின்மீதே-உயிர்

வாராது உடல்
சேராது விதி
மாறாது போப்போ (நன்)

சா:- விட்டும்மை மீளேன் விதவையாய் வாழேன்
விண்ணவர் போற்றும் தர்மபூபதி (வி)

எம:- வீண்வீண் முடியாத கார்யம் மீதே
வேறேதுங்கேள் நீ தருவேன் மாதே-எதிர்
விள்ளாதே மொழி
தள்ளாதே என்முன்
நில்லாதே போப்போ (வி)

ஏ! பெண்பாவாய்! இனி நீ பின்பற்றுதே! உன்நாதன் உயிர் தவிர வேறேதேனும் ஓர் வரங்கேள்; தந்து செல்லுகிறேன்.

சாவி:- பங்காருமோரிப்பியாரி என்ற மெட்டு.

இராகம்-கல்யாணி-தாளம்-ஆதி.

பல்லவி.

சீலம் மிகுந்திந்த ஞாலம் புகழ்ந்திடும்
ஜீவா தாரனே (சீல)

அநுபல்லவி.

பாலித்திரங்குவீர் பாவிகஜகேது
பாரைப்பறித்தெந்தன் மாமனையே
பார்வையிழந்தவர் பாக்யஞ்சிதைவுறப்
பாழ்வனமோட்டினன் தீவினையே (சீல)

தொகையறா

காப்பது பாரமே கைவிடல் பாவமே
கருதினே னுதாரமே
கணவனைத்தோற்றுயான் கதறிடுந் தருணமோர்
கதிதங்கள் பாதாரமே

சரணம்

கண்களாலெங்களைக் காணும்படியே
கடாட்சிக்கவேணு மொருவரமே
காசினி மீதவர் காவலனைக்
கருணைபுரிதல் மறுவரமே (சீல)

சுவாமி! எனது மாமனர் தமது பகைவனை கஜகேது என்பவனால் இராஜ்யத்திலிருந்து துரத்தப்பட்டு, இந்தவனத்தில் வந்து தவக்கோலம் பூண்டிருக்கிருர். அவருக்கு இரண்டு கண்களும் தெரியாது. அவரிழந்த இராஜ்யத்தைத் திரும்பப் பெறவும், முன்போல் அவர்நேத்திரம் பிரகாசிக்கவும் கிருபைசெய்தல் வேண்டும்.

எம: தந்தேன் வந்தனமே என்ற வர்ணமெட்டு.

இராகம்-மோகனம்-தாளம்-ஆதி.

பல்லவி.

தந்தேனிந்த வரம்-இதோ
தந்தேனிந்த வரம் (தந்)

அநுபல்லவி.

சாவித்திரி சற்புத்திரி
சஞ்சல மற்றிடு நெஞ்சுக ளித்திடு (தந்)

சரணம்.

உந்தன்மாமன் உயரரசாட்சி-இனி
நித்யமாய் சத்யமாய்
உற்றிடும் மாட்சி-கண்கள்
ஓங்கும்ப்ர காசமே தாங்கும்வி சேஷமே
ஒன்றுக்கும் அஞ்சாதே சென்றுவா நீமாதே (தந்)

ஹே! பெண்கள் நாயகமே! இதோ நீ கேட்டவரம் இரண்டையும் தந்துவிட்டேன். இனி நீ யாதொன்றுக்கும் கவலையடையாதே. உன் மாமனது பகைவனன கஜகேது தானே வலியவந்து உங்கள் இராஜ்யத்தை உங்களிடத்தில் ஒப்புவித்து விடுவான். நீங்கள் முன்போல் அரசுபுரியலாம். நீ சுகமாகச்சென்றுவா:

[செல்லுகின்றுன். சாவித்திரி அவன்பின் தொடர்ந்து]

நையாஜோபன்வாலிகே என்ற மெட்டு.

இராகம்-ஹிந்துஸ்தான்தோடி-தாளம்-ஆதி.

பல்லவி.

ஐயா தர்மப்ரபுவே அருள்புரிவீர்-எனக்
கருள் புரிவீர் (ஐ)

அநுபல்லவி

துய்யமார்க்கண்டன் துதிபெறுதொண்டன்
தொழுதற்கிரங்கியாயுள் துலங்கவைத்தீர்-என்னைக்
கலங்க வைத்தீர்
தோதக வஞ்சமீ தேதோ புகலுவீர் (ஐ)

சரணம்.

மாங்கல்யதானம் வழங்கப்ரதானம்
வரமீதருளல் வேண்டும் மனதிரங்கி-என்மேல்
மனதி ரங்கி
மங்கைநா னிங்குக லங்கிமெ லிந்தேனே (ஐ)

சுவாமி! பதினாறு வயதுள்ள மார்க்கண்டனுக்கு "என்றும் பதினாறு" என்றானதுபோல் என் நாதனுக்கும் ஆதல் வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதுதான் எனது பிரார்த்தனை!

கரபாரபோம்பர்சே என்ற வர்ணமெட்டு.

இராகம்-அமீர்கல்யாணி-தாளம்-ஆதி.

பல்லவி.

சர்வல்லமையுள்ள சாட்சாத்பரம்பொருளே
தந்தைமாற்றி வைத்தார் சார்பினிலே (சர்)

அநுபல்லவி.

மர்மமிதிலிருக்கும் மார்க்கமுணராமலே
வார்த்தைபுகலவந்தாய் மாமயிலே (சர்)

தோகையறு.

என்னாலேமுடியாது ஈந்திடவின் நாதனுயிர்தனையே
ஏதேனும்வேறுவர மீய்குவேன் ஏற்றுன்தன் மனையே
இன்னேநீ செல்லுவாய் ஏங்கிவா டாதுவிற்பனியே
ஈங்கெனை விணாக என்தொடர் கின்றனை நீ இனியே

சரணத்தொடர்.

எல்லாமவன்செயலென் றெண்ணுதலேகட்டமை!
இறந்தவர்க்காயிரங்கல் இதுமடமை (சர்)

சாவித்திரி! உலகமெல்லாம் படைத்துக் காத்து அழிக்கின்ற ஒருவன். அவன் எப்படியும் செய்யலாம் அவனுடைய கட்டளை

யின்படி நடக்கின்ற நான் இது விஷயத்தில் ஒன்றும் செய்யமுடியாது. இது உனக்கு நன்ருய்த் தெரிந்தது தானே?

சாவி:-தெரிந்தது தான். ஆனல் தாங்கள் சொல்லுகிறபடி யல்ல. ஒரு பிரபுவினிடத்தில் அவனது காரியம் பார்க்கின்ற ஒருவன் எல்லாக்காரியத்திற்குமே அப் பிரபுவின் அனுமதி பெற்றுச் செய்வதென்ருல் அது சாத்தியப்பட மாட்டாது. ஒன்று இரண்டாவது தான் சுயேட்சையாய்ச் செய்வதற்கு அப்பிரபுவே அவனுக்கு அனுமதி கொடுத்துத் தீரவேண்டும். அதுபோல் "இது தங்களால் முடியக்கூடியகாரியம்" என்று நான் நினைக்கிறேன். ஆகையால் என் நாதனை விட்டுவிடவேண்டும்.

எம:-பெண்பாவாய்! "நீ அப்படி நினைப்பது தப்பு" என்று நான் நினைக்கிறேன். ஆகவே உன் நாயகனுடைய உயிரைத் தவிர இன்னும் வேறு எது வேண்டுமென்ருலுங் கேள். கொடுத்து விட்டுப் போகிறேன். ஏதோ நின் விஷயத்தில் என்னையறியாமலே எனக்கு ஒருவிதமான கருணை ஏற்படுகிறது.

சாவி:- விருத்தம்.

சிந்தையி லிரக்கங்கொண்டு தேவரீ ருரைத்தவாறே
இந்தமா நிலத்திலென்னை ஈன்றளித் தினிதுகாத்த
தந்தையா ரொழுக்கமாதி சற்குணமுடைய நூறு
மைந்தரைப் பெற்றுவாழ வரமெனக் கருளுவீரே.

சுவாமி! என் தந்தைக்கு என்னைத் தவிர வேறு புத்திரர் இல்லை. ஆகவே அவருக்கு நூறு ஆண் குழந்தைகள் பிறக்கும்படி அருள்செய்தல் வேண்டும். இதுதான் எனது பிரார்த்தனை.

எம:-சாவித்திரி! அவ்வாறே அளித்தேன். இனி நீ என் பின்பற்ற வேண்டாம். உன்னல் இந்த அக்கினியாற்றைக் கடக்கமுடியாது.

[அக்கினி யாற்றைக் கடந்து மறைந்து விடுகிருன். சாவித்திரி தன்கற்பின்மகிமையால்அவ் வாற்றைக் கடந்து அவனைக் கண்டுபிடித்து]

இராமபஜனஹோகியா என்ற வர்ணமெட்டு.

இராகம்-இந்துஸ்தான்தோடி-தாளம்-ஆதி.

பல்லவி.

நானினி வாழ்வு வேண்டிலேன் - நமபதியே (நா)

அநுபல்லவி.

மானிலத்தில்மணாளன் மாண்டு மடிந்தபின்னர்
மங்கையர்க் கென்னகாரியம் நமபதியே (நா)

சரணம்.

கணவனிறந்தபின்னர் கற்புள்ளமாதர்க்கிங்கு
காரியம் ஒன்றுமில்லையே - நமபதியே (நா)

மாங்கல்யமற்றபாவி மாபாவியானேனையோ
மனதிரங்கிடவேண்டுமே - நமபதியே (நம)

பர்த்தாமடிந்தபின்னர் பவுசுபாக்யமிருந்து
பலனென்ன கண்டேன் ஐயனே - நமபதியே (நம)

ஆளனிழந்தபாவி ஆகாதபாவியானேன்
ஆட்கொள்ள வேண்டுமையனே - நமபதியே (நம)

சுவாமி! நான் தங்களிடமிருந்து ஏதேதோ பல வரங்களைப் பெற்றுக்கொண்டேன். இருந்தாலும் என்மணாளனை இழந்து இந்த வரங்களைப்பெற்று என்னபயன் அடையப் போகிறேன்! ஆகவே என் பர்த்தாவை எனக்குத் தந்தருளல் வேண்டும். அல்லது அவரிருக்கின்ற இடத்தில் என்னையும் சேர்ப்பித்துக் கொள்ளல் வேண்டும். 'பெண்ணென்றால் பேயும் இரங்கும்' என்பது பழமொழி.

எம:-பெண்ணிற் பெருந்தகைவாய்ந்த பேதாய்! நின்மனம் கலங்குவதைக்கண்டு என்மனம் இரங்குகிறது. நீ கண்ணீர்விடுவதைப் பார்த்த என்கண் நீரைப்பெருக்குகின்றது. நின் நாயகன் உயிரைத்தவிர வேறெது வேண்டுமென்றாலும் கேள். தந்து செல்லுகிறேன். என்னால் முடியாத ஒன்றை என்னிடம் கேட்க வேண்டாம். நீ இந்த ஆற்றைக் கடந்ததே ஓரதிசயம்.

சாவி:- முத்தமிழ் வித்வகல்யாணி என்ற மெட்டு.

இராகம்-அமீர்கல்யாணி-தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

புத்திர - சம்பத்து தானே தந்திடப் -
போற்றிநின் றேனே
உத்தம - தர்மபூ மானே காருண்யந்-
தழைத்த கோமானே (புத்)

தோஹறா.

மைந்தரைப்பெறுவதே மாபாக்கியமாம்புவியில்
மற்றுமொரு பாக்கியமேது
மலையெனக்குவிதனம் வாழ்வுபெற்றாலுமது
மருவுபத மீந்திடாது.

ஷை கல்ணி.

| | | | |
|---|---|---|---|
| வழி வழி | - வம்சசந் | தானம் | தழைத்திட |
| வழங்குவீர் | | தானம் | |
| பிழைபொறுத் - | தாள்வதே | ஞானம் | இலாவிடில் |
| பேதைக்கவ | | மானம் | (புத்) |

சுவாமி! "அறம் பொருள் இன்பம் வீடு" என்று சொல்லப்படுகிற புருடார்த்தம் நான்கினுள் முதல் நின்றது தருமமே! அத்தருமத்திற்குத் தலைவரா யிருக்கப்படுகிறவர் தாங்களே! அதனாற்றான் தரும சொரூபியாகிய தங்களுக்கு "எமதர்மன்" என்ற ஒருபெயர் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே நான் ஒரு புத்திரப்பேறு அடையும்படி அனுக்கிரகித்தல் வேண்டும். இது தான் எனது பிரார்த்தனை.

எம:- ஜெயராமா என்ற மெட்டு.

இராகம்-பைரவி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

வரந்-தந்தேன் வரந்தந்தேன்
தரணிமேல் அருமையாய்த் தருணமே பெருமையாய்த் (தந்)
தக்கவாறு புகழ்பெறு மக்கள் பெருகிடவரந் (தந்)

அநுபல்லவி.

சாதனமிதுகற் பார்வள
மாதர்பெருதது யாவுள (தந்)

சரணம்.

மைந்தர்பெறார்க்கில்லை வாய்த்திடுமோட்சமே
மாந்தர் தனக்குவி வைத்தென்னருட்சமே
சிந்தைமயங்கித்தி யங்கிவாடாதே
சென்றுநன்றுவாழ்வாய் சேமத்தோடிப்போதே (தந்)
காட்சிபலபல கண்டதுண்டித்தரை
கற்பரசிநின்போல் காணேனிதுவரை

மாட்சிமையுற்றநின் வாய்மொழியைக்கேட்டு
வர்க்கக்கற்கண்டொக்கும் வாக்கில்வசப்பட்டுத் (தந்)

ஏ ராஜபுத்திரி! உன்னைப்போன்ற ஒரு கற்புடைய பெண் மணியை இதுவரை நான் கண்டதே இல்லை. இருந்திருப்பதாகக் கேள்விப்படவுமில்லை, மதுரமான நின் வாக்கினல் மர்மமான வேத ரகஸ்யத்தைக்கேட்டுக் கிருதார்த்தனுனேன். நீ என்னிடம் ஒருபுத்திரப்பேறு கேட்டனை. நான் உனக்கு அநேக புத்திரப்பே றுண்டாகுமாறும், அவர்களால் அந்தந்தக்காலத்துத்தேவர்களது இடுக்கண் முதலியன தீருமாறும், புவிமுழுதும் ஒரு குடைக்கீழ் ஆளுமாறும் வரமளித்தேன். இதோ எமபட்டணம் சமீபித்து விட்டது. நீ வெகுதூரம் வந்துவிட்டாய். இனி ஏன் என்னுடன் வந்து சிரமப்படுகின்ருய்? திரும்பி நின் இருப்பிடத்திற்குச் செல்.

[சென்று மறைந்துவிடுகின்ருன். சாவித்திரி நாலாபக்கமும் சுற்றிப்பார்த்து அவனைக் காணுது திகிலடைந்து கடவுளை நினைத்து.]

அலையவிடுவேதுனக்கழகாகுமா என்றமெட்டு.

இராகம்-தேசிகம்-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

மாயமாகமறைந்த வகையறியேன்-எந்த
மார்க்கமவர்நடந்தார் வழிதெரியேன் (மா)

தாயற்றபிள்ளையைப்போல் தயங்கலானேன்-என்
தலைவிதியைக்குறித்தே மயங்கலானேன் (மா)

கைக்கெட்டிவாய்க்கெட்டாத கதையாச்சுதே-யான்
கற்பிலடைந்தவரம் சிதைவாச்சுதே (மா)

இக்கணமேமடிதல் இதமாகுமே-இனி
இருப்பதில்என்னபலன் இழிவாகுமே (மா)

ஆ! ஆபத் பாந்தவா! அனுதரட்சகா! ஐயோ இனி நான் என்செய்வேன். எமதர்மராஜனை நான் நேரில் தெரிசித்து, அவர் இடத்தில் இதுவரை நான் வாங்கிக்கொண்ட பலவரங்களும் பாழா யினவே! "பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பெனும் திண்மை யுண்டாகப்பெறின்" என்றபடி கற்பைக்காப்பாற்றும் பெண்மணி

கள் எந்தக்காரியத்தையும் சாதிக்காது கைவிடுதல் உண்டா! நல்லது மறுபடியும் நான் அந்த எமதர்மபூபதியைக் காணமுயலவேண்டும், அல்லது இவ்விடத்தே என் உயிரை மாய்த்துக்கொள்ளவேண்டும்.

[கூர்ந்து ஆலோசிக்கிறுள். காருண்யதேவியின் பெருமுயற்சியால் மனதிரங்கிய எமன் மீண்டும் அவள் கண்ணுக்குப் புலப்பட்டு]

என்ன கேள்விமுறை என்ற வர்ணமெட்டு.

இராகம்-பிலஹரி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

ஏன் மயங்குகின்ருய்
எண்ணம்போ லெல்லாம் ஏது முடிந்திடும் (ஏ)

அநுபல்லவி.

நான்வந்தும்வரந் தான் தந்தும்செல்ல நீ நொந்தும்வீணில்(ஏ)

சரணம்.

ஆண்டுகள்தோறும்நீ அழுதுபுரண்டாலும்
மாண்டார்பிழைத்தினி வாராரொருக்காலும்
அம்மா எல்லாமப் பெம்மானின்செயல் சும்மா நீவீணில் (ஏ)

ஏந்திழையேகேட்ட எத்தனையோவரம்
ஈந்தனனேபெற்றும் இன்னுமோவிசாரம்
ஏதோ நின்முறை யாதோ செய்வது வாதோ நீவீணில் (ஏ)

சாவித்திரி! நீ கேட்ட வரங்களையெல்லாம் நான் கொடுத்துவிட்டேன். இனி உனக்கு ஒருகுறைவும் இல்லையே? அப்படியிருக்க நீ ஏன் வருந்துகின்றனை? வேண்டாம்; நீ திரும்பிச்செல். இனிநீ என்னுேடு வரமுடியாது. நான் நின்னைக் கூட்டிச்செல்லவும் முடியாது.

[நகரத்துள் பிரவேசித்துக் கோட்டைவாயிலை அடைக்கும்படி கிங்கிலியருக்கு உத்தரவிடுகிறுன். சாவித்திரியின்விரதாக்கினி தகிக்க அவர்கள் விலகிவிடுகிறுர்கள். உட்பிரவேசித்து எமனை நோக்கி.]

சுவாமி! தாங்கள் எனக்குப்புத்திரப்பேறு அடைய வரமளித்தீர்கள். என் பர்த்தாவைத் தவிர்த்து நான் எவ்வாறு புத்திரர்களைப்பெறுவது? ஐயீர்! சிறிது ஆலோசித்தருளல் வேண்டும்.

ஏமன்:-(தனக்குள் அதிசயமடைந்து) சாவித்திரி! நான் ஏமாந்து விட்டேன். "தேவர்கள் பின் நிகழ்வதறியார்கள்" என்று நீ சொன்னது முற்றிலும் சரியே. ஆகையால்,

அல்லியெனும் பேருடைய என்ற மெட்டு.

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

உன்மணவாளனுக் கின்றே
உயிர்கொடுத் துதவினன் நன்றே
உயர்ந்ததோர்மூன் றுலகத்திலும்
உத்தமி நீதான் என்றே (உன்)

பதிவிரதா தேவியெனப்
பாருலகோர் போற்றிடுவார்
பாக்யவதி நீயிருந்து
பலஊழி வாழ்ந்திடுவாய் (உன்)

கற்பரசி! இதோநின் மணாளனுயிரைநான் திரும்பக்கொடுத்து விட்டேன். இதுமுதல் நானூறு வருஷம்வரை நீங்களிருவரும் நன்குவாழ்ந்து அநேக புத்திரர்களைப் பெறுவீர்களாக. நீ உனது உடலதேகத்தோடு இந்த எமலோகத்திற்கு வந்ததும், நின்மணாள னுயிரை என்னிடத்திருந்து மீட்டினதும் நின் கற்பின் மகிமையால் ஆகவே மூன்றுலகமும்நின்புகழ்தங்கும்படிபதிவிரதைகளின்பெரு மையைப்பற்றி இங்குள்ளார் அறிய எடுத்துக் கூறுதல் வேண்டும்.

சாவி நொண்டிச்சிந்து.

கற்புநிலை இன்னதென்னவே சொல்லச்சொல்லிக்
கன்னியென்னைக் கேட்டுக்கொண்ட காரணத்தினால்
அற்பமதி யுள்ளவள்யானே உள்ளபடி
அறைகுவேன் அன்புடன்கேட் டருள்புரிவீர்
எண்ணரிய பிறவிதனில் மானிடர்கள்
என்றுட லெடுப்பதுவே ஏற்றமகிமை
பெண்கள் புருஷர்களென்பவர் நல்லொழுக்கம்
பேணிநடக்கக் கடமை பெருமையுண்டாம்
மாதர்கள் பிறந்தவிடத்தில் அன்னை தந்தை

மற்றுஞ்சுற்றத் தாரிடத்தில் மரியாதையாய்
நீதிநெறிக் கலையுணர்ந்து கற்றபடி
நின்றுபெரி யோருரைத்த நேர்மைவழாமல்
அன்னவர்முன் மரியாதையாய் வணக்கமாய்
ஆங்கொழுக வேண்டுமதி யச்சம் நாணமும்
துன்னுமடத்துடன்பயிர்ப்பும் உற்றவராய்த்
சுத்தவிருதயத்துடன் துலங்கவேண்டும்
திருமணம்முடிந்தபின்னர் புருஷனே
தெய்வமென்றனுதினமும் சிந்தனை செய்து
ஒருமனத்துடனிருந்து தம்பதிகள்
ஒருங்குபட்டில்லறத்தில் ஒழுகவேண்டும்
நாயகனேரேழையானாலும் தனக்கவன்
நல்லபணக் காரனென்று நம்பிக்கைகொண்டு
தூயபணிவிடைபுரிந்து தனக்கவன்
சொன்ன சொன்ன படிநின்று தொழுதல்வேண்டும்
வரவுக்குத் தக்கபடியே குடும்பத்தை
வகையுடனே நடத்தும் வழியறிந்து
"தருமமேதலைகாக்கும்" என்றபடி
தானடக்கவேண்டுமதில் தக்ககணியமாம்
தனது கணவனுக்குப்பின் புத்திரரே
தஞ்சமென்றவருடனே சார்ந்துவாழுதல்
இனத்தோடிருந்துவாழுதல் பெண்களுக்கே
ஏற்றமுறையென்றுமேலோ ரெழுதிவைத்தார்
ஆராய்ந்து பார்க்குமிடத்து நாயகனை
அலட்சியமாகினைத்தல் அதிபாபமே
சீராகநடக்கும்பெண்டீர் உலகத்தில்
தெய்வமென்றே செப்பிவைத்தார் தேர்ந்தபெரியோர்
இத்தகைய கற்புடையவர் தாம்நினைத்த
எதையும்முடிக்கவல்ல ஏற்புடையவர்
உத்தமிகளாயிருப்பவர் தக்கமழை
உலகத்தில்பெய்யெனப்பெய் திடலுண்மையே
இதுதான் கற்புநிலைமை. இன்னும்பல
இருப்பினும் தாமறியா தேதுமில்லையே (தங்)

[அங்கு நாரதர் வருகிறார். எமன் அவர்
பாதத்தில் விழுந்து நமஸ்கரித்து]

நீவீசும் பாசத்திலே என்ற வர்ணமெட்டு.

இராகம்-தேசிகம்-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

அதிகார வர்க்கத்திலே
ஆண்மையின்று வக்கத்திலே
அறியாது போனேன் மன்னிப்பீர்
அருளென்மேல் வைப்பீர் (அறி)

தெரியாத காரியமே
செப்பினேன் வீரியமே
தெரிவைமார் கற்புக்கிடேது
செய்தேன் வீண்வாது (அறி)

தங்கள் சபதப் பேச்சே
சமர்த்து ஜெய முண்டாச்சே
தமியேன் பிழை பொறுப்பீரே
தவரிஷி மேலோரே (தமி)

சுவாமி! கற்பரசிகளுடைய மகிமையையும், தம்போன்றமுனி சிரேஷ்டர்களின் பெருமையையும் அறியாது நான் ஏதேதோ பற்பல பிதற்றிவிட்டேன். இதற்காக என்னை மன்னிக்கவேண்டும்.

நாரத:-எமா! பொறுமையே அனைவருக்கும்பூஷணம். இதுநீ அறியாமற் செய்த குற்றமாதலால் உன்னை மன்னித்தேன், நாம் சென்று சத்தியவானை உயிர்ப்பித்து வரலாம் வா.

[எல்லோரும் வனத்திற்கு வந்து சத்தியவானை எழுப்புகின்றனர். அவன் எழுந்து, சாவித்திரியை நோக்கி]

கண்மணி சாவித்திரி! நான் ஏதேதோ பற்பல சொர்ப்பனம் கண்டேன். என்முன் ஒரு கோரபுருஷன் நின்று, என் உயிரைக் கவர்ந்துகொண்டிருந்தான். பெண்மணி! அவனெங்கேகாணவில்லை!

[நாலுபுறமும் சுற்றிப்பார்த்து, எமனைக்கண்டு பயப்படுகிறான். சாவித்திரி அவனைத்தழுவிக் கொண்டு, எமனுக்குமுன் தன் கையை நீட்டி]

நாதா! பயப்படவேண்டாம். அவர்தான் தங்களுயிரைத் திரும்பக்கொடுத்து உதவிய எமதரும ராஜன். அதோ இருப்பவர் நாரதமகரிஷி. அவர்களை நமஸ்காரஞ் செய்துகொள்ளுங்கள்.

[சென்று நமஸ்கரிக்கின்றான்]

ஏம:-சத்தியவந்த! கற்புடைய இம்மாதரசியைக் கல்யாணம் பண்ணிக்கொண்ட நீயே இவ்வுலகத்திற் கொரு சத்தியவந்தன். நீயும், நின்மனைவியும் அநேக புத்திரர்களைப்பெற்றுச்சிரஞ்சீவியாய் வாழக்கடவீர்கள். (நாரதரை நோக்கி) சுவாமி! நான் சென்று வருகிறேன். நீங்கள் இருந்து, ராஜ்யத்திற்குப் போய்ப் பட்டாபிஷேகம் முடித்துவிட்டு வரவேண்டும்.

[எமன் சென்று விடுகிறான். தாய் தந்தையர் சத்தியவானையும், சாவித்திரியையும்தேடிவந்து நாரதரோடு அவரைக் காண்கிறார்கள்]

துயு:-சுவாமி! நமஸ்காரம் தங்களது திருவடி தரிசனத்தால் நாங்கள் மகிமை யடைந்தோம்.

[நமஸ்கரிக்கிறார்கள்.]

நார:-அரச! சாவித்திரியின் பூரண கடாட்சத்தால் ஆயுள் முடிந்த நின் புத்திரன் உயிர் பெற்றெழுந்தனன். இழந்துபோனநின் நேத்திரமும், இராஜ்யமும் நினக்குத் திரும்பக் கிடைத்தது.

[சாவித்திரி மாமன் மாமியை நமஸ்காரஞ் செய்கின்றாள். அவர்கள் சாவித்திரியை மனதாரப் புகழ்ந்து; வாழ்த்து கின்றனர். கஜகேது தன் சைன்யங்களுடன் வந்து, நாரதரைக் கண்டு நமஸ்காரம் செய்து துயுமத்ஸேனன் பாதத்தில் விழுந்து]

சுவாமி! கேவலம் இந்த வாழ்வை சதமென்று எண்ணி, மூடத்தனமாய்த் தங்களை நான் ஏதேதோ இடஞ்சற்படுத்திவிட்டேன். அறியாமற்செய்த என் குற்றத்தை மன்னித்துத் தங்கள் ராஜ்யத்தைத் தாங்களே ஒப்புக்கொண்டு, என்னையாட்கொள்ள வேண்டும்.

துயி:-அப்பா கஜகேது! மன்னித்தேன். "என் செயலாவது யா தொன்றுமில்லை இனித்தெய்வமே; உன் செயலென் றுணரப் பெற்றேன்" என்றபடி எல்லாம் பகவத் செயலன்றோ.

நார:-(எல்லோரையும் பார்த்து) நாம் ராஜ்யஞ் சென்று, பட்டா பிஷேகத்திற்கு வேண்டிய பிரயத்தனஞ் செய்யலாமே?

துயி:-ஆகா அப்படியே! தங்கள் வாக்கியம் எங்கள் பாக்கியம்.

[தபரிஷிகள் சூழ ராஜ்யம் சென்று நாரதர் சத்தியவானுக்கு மகுடஞ் சூட்ட ஆங்கனைவரும் ஆசிர்வதிக்கின்றனர்.]

ஸாதுவாகஹ ஹைகுதா என்ற வர்ணமெட்டு.

இராகம்-அமீர்கல்யாணி-தாளம்-ரூபகம்.

ஆலவாய் மதுராபுரி நக ரம்பிகா எனையாதரி
அம்பிகா எனையாதரி சிறி தருள் புரிந்துபராபரி (ஆ)

தோஹையரு.

சிலமாரறுபத்து நான்குதிரு விளையாடல்
செய்த சொக்கேசன் பாரி
தேவரொடு மானுடர் செம்மை பெறவேயிரு
சேயரையளித்த வீரி

பல்லவித்தொடர்.

காலைமாலை சதாநீயே கதி காவா நீ கருணாகரி
காவா நீ கருணாகரி பாஸ் கரகிருஷ்ண சகோதரி (ஆ)

காட்சிமுடிகிறது.

சுபம்! சுபம்!! சுபம்!!!

வாழிவிருத்தம்.

சத்தியவான் சாவித்ரி சதிபதி யிருவர் காதை
புத்தக மாக்கி வைத்த புண்ணிய புருஷர் வாழ்க
ஒத்திதை நடிப்போர் வாழ்க ஒருங்குறப் பார்ப்போர் வாழ்க
பத்தியாய்ப் படிப்போர் கேட்போர் பரிவுடன் வாழ்கமாதோ.

சாவித்திரி சத்தியவான் முற்றிற்று.

## இச்சரித்திரத்தில் ஆக்டர்கள் பொதுவாகப் பாடவருவதற்கேற்ற கீர்த்தனங்கள்.

சாதரமுகதுகா என்ற வர்ணமெட்டு.

இராகம்-தோடி-தாளம்-ஆதி.

பல்லவி.

ஸ்ரீ தசரத சுதா - தெய்வீக ராம (ஸ்ரீ

அநுபல்லவி.

ஆதரவுனையல்லால் எவருமிலெ
ஆதிமூலப்பொருளே ஆரா வமுதேயருள் (ஸ்ரீ)

சரணம்.

ஜானகி ரமணனே சர்வவியாபனே
சதாவ தாரனே-ஜயரட்சக (ஜா)
ஞானமறைபுகலும் ஞாதாந்தமோன
நாதா பாஸ்கர கிருஷ்ணர் நவிலும் பரமபத (ஸ்ரீ)

அபராத முலு நீவு மன்னிஞ்சி என்ற மெட்டு.

இராகம்-லத்தாங்கி-தாளம்-ஆதி.

பல்லவி.

மதுராம்பிகையே மாதாவே தாயே
வரமருளம்மா மால் சோதரி (ம)

அநுபல்லவி.

இதுமாயமே இகபோகசுகம்
ஈவா நின் பாதம் ஈஸ்வரியே (ம)

சரணம்.

சந்ததமும் நீயே தஞ்சமென்று வாழும்
சாதுக்களுக் கும்மா ஜன்மகன்மம் மூளும்
வந்து காவம்மா வர்மமென் மேலேனோ
வாழ்த்துங் கிருஷ்ண பாஸ்கரர் பாடிநாடும் (ம)

---

வெளிவந்துவிட்டது! வெளிவந்துவிட்டது!!

புத்தகத்திற்கு முந்துங்கள்!!!

மதுரைத் தமிழ்வித்வான், ஸ்ரீ நா. கிருஷ்ணசாமிநாயுடு அவர்கள் எழுதிய நாகரிகவெற்றி, ஞானசவுந்தரி, நந்தனார் சரித்திரம், சகுந்தலா, பாரிஜாதபுஷ்பாபஹரணம், சோள சோள சரித்திரம் இவைகள் தனித்தனி வெளிவந்து விட்டது. புத்தகத்திற்கு முந்துங்கள்,

ஸ்ரீராமஜெயம்

## புதிதாய் வெளிவந்திருக்கிற

# பூர்வ சரித்திர புஸ்தகங்கள்.

அன்பர்களே!

நமது தேசத்திற் பிறந்து தமது ஒழுக்கம், கற்பு முதலிய நல்லறங்களை நிலைநாட்டிய பெரியார் சரிதங்களை உள்ளது உள்ளவாறு படித்துணரவும், அவற்றை அரங்கமேடையில் "இது புண்ணியநாடு" என்பதை யாவரும் ஒப்புக்கொள்ளும் வண்ணம் உள்ளது உள்ளவாறு நடத்திக் காண்பிக்கவும் விரும்புகிறீர்களா?

பழந்தமிழ் நூல்களில் ஒன்றாகிய "சிலப்பதிகாரக்கதை" எனும் கோவலன் சரிதையை முற்றிலும் அவனது பெருந்தன்மைக்குமாறுபட்ட வகையாக மாற்றப்பட்டு நீண்டகாலமாக நாடகமேடையில் நடத்திவருவது போல் அல்லாமல், அவர்களது பெருந்தன்மை கற்பொழுக்கம் முதலியவற்றை உள்ளது உள்ளவாறு படித்துணரவும், படிப்பதற்கவகாசமற்ற தமிழ் மக்களும் அறியுமாறு அவற்றைத் தேனைத்தித்திக்கும் திவ்ய பாடல்களாகவும், பாகைத்தித்திக்கும் திவ்விய வசனங்களாகவும் கண்கூடாக நடத்திக் காண்பிக்கவும் கருதுகிறீர்களா?

நமதுதேசப்பெரியார் சரித்திரங்களைப் படிப்பதிலிருந்தும் நடத்துவதிலிருந்தும் அவர்களது அரும்பெருஞ் செயல்களைப் படிப்போரும் நடத்துவோரும் நடத்தக்காண்போரும் நேரிற்கண்டபடி கண்டு மனது அவற்றோடு ஈடுபட்டுப் புராதனமான வழக்க ஒழுக்கங்கள் தேசபக்தி, தெய்வபக்தி முதலியனவற்றில் மேலும் முன்னேற நினைக்கிறீர்களா?

அப்படியானால் நமது மதுர வாக்காளர் மதுரைத் தமிழ் வித்வான் ஸ்ரீ நா. கிருஷ்ணசாமி நாயுடவர்கள் எழுதியிருக்கிற தெள்ளிய செந்தமிழ் நடையிலுள்ள அடியிற்கண்ட சரித்திரங்களை ஒருமுறை வாங்கிப் படித்தும் நடத்தியும் பயன் படுத்துங்கள்.

| | | |
|---|---|---|
| நல்லதங்காள் சரித்திரம் | 1 - 2 | பாகங்கள் |
| ஞானசவுந்தரி சரித்திரம் | 1 - 2 | பாகங்கள் |
| நளன் சரித்திரம் | 1 - 2 | பாகங்கள் |
| சகுந்தலா சரித்திரம் | 1 - 2 | பாகங்கள் |
| சாவித்திரி சரித்திரம் | 1 - 2 | பாகங்கள் |
| பரிஜாத புஷ்பாபகரணம் | 1 - 2 | பாகங்கள் |
| நந்தன் சரித்திரம் | 1 - 2 | பாகங்கள் |
| சோமசோ சரித்திரம் | 1 - 2 | பாகங்கள் |
| ஸ்ரீகிருஷ்ணர்ஜாம்பவதி சபதம் | 1 - 2 | பாகங்கள் |

1 - 2 பாகங்கள் அடங்கிய இவற்றின் விலை அணா நாலுதான்.

மதுரைத் தமிழ் வித்வான்,

ஸ்ரீ. நா. கிருஷ்ணசாமி நாயுடவர்கள் எழுதிய,

# ஞான சவுந்தரி.

நண்பர்களே! கவனியுங்கள்!! கவனியுங்கள்!!!

நமது தமிழ் வித்வான் ஸ்ரீ. நா. கிருஷ்ணசாமி நாயுடவர்கள் இயற்றிய சாவித்திரிசத்தியவான் முதலிய சரித்திரங்களைக் கண்ணுற்றவரும் 'இவரியற்றிய ஞானசவுந்தரி முதலிய சரித்திரங்களைக் கண்ணுற்றவரும் 'இவர் எம்மதத்திலும் சம்மதம் பெற்ற சமரசரென்று அபிப்பிராயப் படுகிறார்கள். இனியசெந்தமிழில் அமைந்துள்ள வசன சாதுயர்களும் புதிய வர்ண மெட்டுக்களில் அமைந்துள்ள இன்சுவைப் பாடல்களும் ஆக்காங்கமைந்துள்ள மார்க்க சம்மதப்பட்ட மேற்கோள் உதாரணங்களும் சங்கீதப் பயிற்சி பெற்றோர்க்குச் சங்கீத இன்பத்தையும் தமிழ்ப்பயிற்சிபெற்றோர்க்குத் தமிழின் இன்பத்தையும் மார்க்கபக்திபெற்றோர்க்குமார்க்கத்தின் உண்மையையும் ஒருங்கே தந்து உவகையில்மகிழுமாறு செய்கின்றன. கலாசாலை மாணவர்களும் இதனைக்கற்றுச் சரித்திர விஷயம்சங்கீத விஷயம் மார்க்க விஷயம் முதலியன அனைத்தும் ஒருங்கேபெறுமாறு மெச்சத்தக்க இச் சரித்திரம் அமைந்திருக்கிறது.

இதனை மதுரை, பசுமலைக்கலாசாலை ஆசிரியர்களும் மாணவர்களும் பயின்று அவர்களது முத்தமிழ்க்கான சபா ஹோதாவில் நடத்தி நற்பெயர்பெற்றிருக்கிறார்கள். நாடகாபிமானிகளுக்கு இது ஒருநாடக நூலாகவும் நற்றமிழபிமானிகளுக்கு இது ஒரு நற்றமிழ் நூலாகவும் மிளிர்கின்றபடியால் இதனை அனைவரும் கலாசாலை மாணவர்களுங் கூடப்படித்தறிந்தால் தெய்வ பக்தி, இராஜபக்தி ஒழுக்கம், அடக்கம், காருண்யம், முதலியநல்லகுணங்களில்சித்திக்கும் நன்மையும், பொய்மை, பொறாமை முதலிய தீயகுணங்களில் சித்திக்கும் தீமையும் இன்னின்ன என்றுணரலாம்.

சொற்பக் காப்பிகளே தயார்! ஒரு முறை இதனை வாங்கிப் படித்தறிந்தால் மேலே எழுதியுள்ள இவை அனைத்தும் உண்மைதானோ அல்லவாவென்று தெரிந்து கொள்ளலாம்.

ஷை யார் இயற்றிய சகுந்தலா 1-2 பாகங்கள் விலை அணா 0—4—0

இ. மா. கோபாலகிருஷ்ணக்கோன்,
புக்ஷாப், ஸ்ரீ கோபால் மஹால்,
வடக்குச்சித்திரை வீதி, மதுரை.